


உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
R.Dis. No. 1467/19




மணி - 35 சுடர் - 181 | ஹிஜ்ரி 1441 - ரஜப் 28 | திருவள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி - 11 | சென்னை 24.03.2020 செவ்வாய் | வெளியூர் 25.03.2020 புதன் | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 4

## கொரோனா வைரசுக்கு எதிராக மத்திய, மாநில அரசுகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்

## ஒடிசா மாநில முதல்வர் நவீன் பட்நாயக் கூறியதைப்போன்று

# மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒத்தி வைக்க வேண்டும்

### டெல்லி மதவெறி தாக்குதலால் பாதிப்புக்குள்ளானோருக்கு நிதி வழங்கியோர் விவரம்:-

புதுக்கோட்டை மாவட்டம்

| | |
|---|---|
| 83. புதுக்கோட்டை ஈத்கா பள்ளிவாசல் | 12130 |
| 84. புதுக்கோட்டை பெரிய பள்ளிவாசல் | 4135 |
| 85. புதுக்கோட்டை மேலப் பள்ளிவாசல் | 2100 |
| 86. புதுக்கோட்டை அடப்பன்வயல் பள்ளிவாசல் | 1215 |
| 87. புதுக்கோட்டை மஜ்லிதுஸ் ஸிராஜ் மார்கட் பள்ளிவாசல் | 3938 |
| 88. புதுக்கோட்டை எஸ்.ஏ.எம். பெனாசிர் பேகம் | 500 |
| 89. புதுக்கோட்டை நூர் பள்ளிவாசல் (தெற்கு 3) | 640 |
| 90. புதுக்கோட்டை பஸ் ஸ்டாண்ட் ரிசர்வ் பள்ளி | 5300 |
| 91. புதுக்கோட்டை கலீப் நகர் பள்ளிவாசல் | 3930 |
| 92. புதுக்கோட்டை டி.வி. நகர் ஆயிஷா பள்ளி வாசல் | 10000 |
| 93. புதுக்கோட்டை எம். பக்ருதீன் ராஜா இ.யூ.முஸ்லிம் லீக் நகர செயலாளர் | 2500 |
| 94. ஆலங்குடி பெரிய பள்ளிவாசல் | 5714 |
| 95. ஆலங்குடி கலிபுல்லா நகர் பள்ளிவாசல் | 2120 |
| 96. அறந்தாங்கி முஸ்லிம் சுன்னத் ஜமாத் | 55005 |
| 97. பரம்பூர் பள்ளி, முகமது பாரூக் வழி | 22000 |
| 98. புதுக்கோட்டை, போஸ் நகர் பள்ளிவாசல் | 1000 |
| 99. கந்தர்வகோட்டை பள்ளிவாசல் | 2217 |
| 100. இலுப்பூர் மதீனா பள்ளிவாசல் | 4000 |
| 101. அன்னவாசல் முஸ்லிம் சுன்னத் ஜமாத் | 13400 |
| 102. பெருங்களூர் பள்ளிவாசல் | 1406 |

இராமநாதபுரம் மாவட்டம்

| | |
|---|---|
| 103. தேவிபட்டினம் பிரைமரி பி.எம். சித்திக் மூலமாக | 7000 |
| 104. ஏர்வாடி தர்ஹா பிரைமரி நவ்பாதுஷா ஆலிம் மூலமாக | 5500 |
| 105. கே.எம். அப்துல்லாஹ் பாஷா, காஞ்சிபுரம் | 5000 |

- தொடரும்...

குறிப்பு:- வசூலித்த நிவாரண தொகையை வருகின்ற 31.03.2020 க்குள் வங்கியில் செலுத்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**நிவாரண நிதி அனுப்பவேண்டிய முகவரி:**

| | | |
|---|---|---|
| Name | : | IUML TN RELIEF FUND |
| Account Number | : | 030502000005282 |
| Bank | : | INDIAN OVERSEAS BANK |
| Branch | : | MUTHIALPET, CHENNAI |
| IFSC Code | : | IOBA0000305 |
| SWIFT Code | : | IOBAINBB305 |

## தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு இருந்த ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல்வர் உமர் அப்துல்லாஹ் 8 மாதங்களுக்கு பிறகு விடுவிப்பு

ஸ்ரீநகர், மார்ச். 24-



தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதல் முதல்வர் உமர் அப்துல்லாஹ் சுமார் 8 மாதங்களுக்கு பிறகு விடுவிக்கப்பட்டுள்ளார்.

காஷ்மீர் மாநிலத்துக்கு சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த அரசியலமைப்பு சட்ட பிரிவுகள் 370 மற்றும் 35-ஏவை ரத்து செய்தும், அந்த மாநிலத்தை 2 யூனியன் பிரதேசங்களாக பிரித்தும் மத்திய அரசு கடந்த ஆகஸ்டு மாதம் 5-ந் தேதி அதிரடி நடவடிக்கை எடுத்தது. அதைத்தொடர்ந்து காஷ்மீரில் விரும்பத்தகாத செயல்கள் நடந்துவிடாதபடிக்கு, அந்த மாநிலத்தின் முன்னாள் முதல்-மந்திரிகள் பரூக் அப்துல்லா, உமர் அப்துல்லா, மெகபூபா முப்தி ஆகியோர் உடனடியாக தடுப்புக்காவலில் (வீட்டு சிறைவாசம்) வைக்கப்பட்டனர்.

பரூக் அப்துல்லா, அவரது மகன் உமர் அப்துல்லா ஆகியோர் பொது பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். இந்த சட்டம், ஒருவரை கைது செய்து விசாரணையின்றி 3 மாதங்கள் காவலில் வைக்க அதிகாரிகளுக்கு அதிகாரம் அளித்துள்ளது. மேலும் இந்த காவலை 2 ஆண்டுகள்வரை நீட்டிக்கவும் முடியும்.

இந்த நிலையில், கடந்த சில வாரங்களுக்கு முன்பு பரூக் அப்துல்லா மீதான பொது பாதுகாப்பு சட்டம் ரத்து செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து பரூக் அப்துல்லா வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில், உமர் அப்துல்லா மீதான பொது பாதுகாப்பு சட்ட நடவடிக்கையும் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, சுமார் 8 மாதங்களுக்கு பிறகு உமர் அப்துல்லா விடுவிக்கப்பட்டார்.

### கொரோனா விஷக்கிருமி முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் வரும் வரை

## மணிச்சுடர் 25-03-2020 புதன் முதல் வெளிவராது

'மணிச்சுடர்' நாளிதழ் அலுவலக ஊழியர்கள் தினமும் அலுவலகம் வர வசதியான பேருந்து, மின்சார ரயில் மற்றும் போக்குவரத்து சாதனங்கள் யாவும் முடங்கியுள்ள நிலையில் அலுவலகம் இயங்குவது மிகுந்த சிரமமாக இருப்பதால், கொரோனா விஷக்கிருமி பரவுவது முழுமையாக தடுக்கப்பட்டு, போக்குவரத்து சாதனங்கள் மீண்டும் சகஜ நிலைக்கு திரும்பும் வரையில் மார்ச் 25 முதல் மணிச்சுடர் வெளிவராது என்பதையும், நிலைமை சீரடைந்த பிறகு மணிச்சுடர் வெளியிடுவது தொடரும் என்பதையும் மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

– நிர்வாகி

## மலேசியாவில் தவிக்கும் தமிழர்களை மீட்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### மத்திய அமைச்சரிடம் நவாஸ்கனி எம்.பி. கோரிக்கை

பனைக்குளம், மார்ச். 24-



மலேசியாவில் தவிக்கும் தமிழர்களை உடனடியாக மீட்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் நவாஸ்கனி எம்பி. கோரிக்கை விடுத் துள்ளார்.

ராமநாதபுரம் நவாஸ் கனி எம்பி., மத்திய வெளியுறவுத்துறை அமைச்சரிடம் அளித்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:-

மலேசியாவில் கடந்த 18-ந் தேதி தாயகம் திரும்ப வேண்டிய தமிழர்கள் அங்கிருந்து வர முடியாமல் தவித்து வருகின்றனர்.

அவர்களில் 20-க்கும் மேற்பட்டோர் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். அங்கு அவர்கள் தவிக்கும் வீடியோ காட்சிகள் மற்றும் அவர்களிடம் இருந்து வரும் தகவல்கள் கடும் வேதனை அளிக்கிறது. எனவே, அவர்களை உடனடியாக மீட்டுத்தர மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொரோனா நோய் தொற்றினால் உலகம் முழுவதும் அச்சம் சூழ்ந்திருக்கும் சூழலில் இந்தியாவை சேர்ந்தவர்கள் தாயகம் திரும்ப நடவடிக்கை எடுப்பது நம் கடமை. எனவே, உரிய நடவடிக்கையை விரைவாக இந்திய வெளியுறுத்துத்துறை அமைச்சம் எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில் மலேசியாவில் தவித்த 116 பேர் சிறப்பு விமானத்தில் சென்னை அழைத்து வரப்பட்டனர்.

## நாகப்பட்டினம் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு மயிலாடுதுறை தனிமாவட்டமாக உருவாக்கப்படும்

### சட்டப்பேரவையில் எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

சென்னை, மார்ச். 24-



நாகப்பட்டினம் மாவட்டம் 2 ஆக பிரித்து மயிலாடுதுறை மாவட்டம் உருவாக் கப்படும் என சட்டப் பேரவையில் முதல்வர் எடப் பாடி பழனிசாமி அறிவித் துள்ளார். தமிழகத்தில் புதிதாக 11 மருத்துவக் கல்லூரி களை தொடங்க மத்திய அரசு அனுமதி அளித் துள்ளது. இதில், நாகை மாவட்டம், ஓரத் தூரில், 367 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைய விருக்கும் புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைக்கு முதலமைச்சர் கடந்த 8-ம் தேதி அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் பேசிய முதல்வர் எடப்பாடி பழனி சாமி, மயிலாடு துறையை தனி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை, அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் விரைவில் மயிலாடுதுறை மாவட்டம் உதயமாகும் என்றார். இந் நிலையில், தமிழக பட்ஜெட் கூட்டத்தொடரின் கடைசி நாளான இன்று கொரோனா நிவாரணங்களை அறிவித்த முதல்வர் எடப்பாடி பழனி சாமி, நாகப்பட்டினம் மாவட்டம் 2 ஆக பிரித்து மயிலாடு துறை தனி மாவட்டமாக உருவாக்கப் படும் என அறிவித்தார். மயிலாடுத்துறை தனி மாவட்டமாக உதய மாகும் நிகழ்ச்சி விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### கொரோனா வைரசை கட்டுப்படுத்துவதற்கு உதவிடும் வகையில்

## கிருமிகளை பாதுகாப்பாக எடுத்துச் செல்லும் சாதனங்கள் உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஆர்.எம்.எஸ். நிறுவன இயக்குநர் டாக்டர் கே. கலீல் வேண்டுகோள்

சென்னை, மார்ச். 24-



கோவிட் 19 வைரசுக்கு எதிராக போராடி வரும் மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கைகளுக்கு உதவிடும் வகையில் சென்னையை சேர்ந்த ரெடி மைக்ரோ பயாலஜி சிஸ்டம் (ஆர்எம்எஸ்) முன் வந்துள்ளது.

இதனடிப்படையில் இந்தியா, அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் தயாரிப்பில் நன்கு அனுபவம் உள்ள தங்களது கிளினிக்கல் மைக்ரோ பயோலஜிஸ்ட் ஆலோசகர்கள் மூலம் வைரசை பாதுகாப்பாக எடுத்துச் செல்லக்கூடிய 'வைரல் டிரான்ஸ்போர்ட் மீடியாவை' தயாரிக்க முன்வந்துள்ளது.

இந்த ஆலோசகர்களுக்கு சவூதி அரேபியாவில் மைக்ரோ பையோலஜி தயாரிப்புகளுக்கான கல்ஃப் கோஆப்ரேஷன் கவுன்சில் ஜிசிசி. டெண்டர்களை கையாளுவதில் அனுபவம் உள்ளது.

இதுகுறித்து ஆர்.எம்.எஸ். நிறுவனத்தின் இயக்குநர் டாக்டர் கே. கலீல் ஆங் கில நாளிதழ் டெக்கான் கிரானிகல் (23-03-2020) அளித்த பேட்டியில் கூறியிருப் பதாவது:-

ஆரம்பத்திலேயே நோயை அறிந்து கொண்டால் அந்த நோய் பற்றி முன்கூட்டியே கணிக்க முடியும். தொற்று நோய் களை துல்லியமாக கண்டறிவதற்காக பரிசோதனை மையங் களை அதிகரிக்க வேண்டியது மிகவும் அவசியம்.

மேலும், முறையான மாதிரி (ஸ்பெசிமன்) சேகரிப்பு மற்றும் போக்குவரத்து வசதி கண்டிப்பாக இருக்க வேண் டும். மூச்சு சுவாச வைரல் தொற்றுவதை பொறுத்த மட்டில் இந்த கிருமிகளை பாதுகாப்பாக எடுத்துச் செல்லும் வழிமுறைகளுக்கு பற்றாக்குறை உள்ளது.

இதை பாதுகாப்பாக எடுத்துச் செல்லும் வசதியால் ஆன்டிஜன் சோதனை மற்றும் டிஎஃப்ஏ. போன்ற சோதனைகளை துரிதமாகவும், வெற்றிகரமாகவும் மேற் கொள்ள முடியும்.

கோவிட் 19 ஆய்வுக்காக நோயாளிகளிடமிருந்து கிளினிக்கல் ஸ்பெசிமன்களை சேகரித்தல், கையாளுதல் மற்றும் பரிசோதித்தல் ஆகியவற்றுக்கான நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் (சிடிசி) வழிமுறைகள் குறித்து டாக்டர் கலீல் கூறுகையில், "ஸ்பெசிமன்களை சேகரித்ததும், அந்த ஸ்வாப்புகளை மூன்று மில்லி வைரஸ் டிரான்ஸ் போர்ட் மீடியாவில் வைக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதர ஸ்பெசிமன்கள் சர்வதேச வழிமுறைப்படி சேகரித்து எடுத்துச் செல்லப்படுகிறது" என்று குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், இதுபோன்ற தயாரிப்புகளில் இந்தியாவில் ஹிமிடியா லேப்ஸ் போன்ற குறிப்பிட்ட நிறுவனங்கள் மட்டுமே உள்ளன. இந்த தயாரிப்பை பெரிய அளவில் மேம்படுத்தி உற்பத்தி அதிகரிக்க மத்திய அரசு மற்றும் மாநில அரசுகள் சிறுதொழில் நிறுவனங்களுக்கு உதவ வேண்டும். தற்போது அதிக அளவில் தேவைப்படும் இந்த தயாரிப்பை அதிகரிப் பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கும்படி தமிழக முதல்வர் மற்றும் சுகாதார அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஆர்.எஸ்.டி., யூடியூப் சேனலுக்கு இ.யூ. முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் பேட்டி

**சென்னை, மார்ச். 24–**

**கொரோனா வைரசுக்கு எதிராக மத்திய, மாநில அரசுகள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும், ஒடிசா மாநில முதல்வர் நவீன் பட்நாயக் கூறியதைப் போன்று மக்கள் தொகை கணக் கெடுப்பை ஒத்தி வைக்க வேண்டும் என்று ஆர். எஸ்.டி., யூடியூப் சேனலுக்கு அளித்த பேட்டியில் பேராசிரியர் கே.எம். காதர் மொதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**




21-03-2020 சனிக்கிழமை அன்று ஆர்எஸ்டி, யூடியூப் சேனலுக்கு பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் அளித்த பேட்டியின் விவரம்:-

அனைத்து சகோதர சகோத ரியருக்கும் எனது அன்பான நல்வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

உலகையே உலுக்கிக் கொண்டிருக்கும் கொரோனா விஷக்கிருமி பரவலைத் தடுக்க இன்று தமிழகம் உட்பட இந்தியாவின் அனைத்து மாநிலங் களிலும், மத்திய - மாநில அரசுகள் மிகப் பெரிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கின்றன. நாடு முழுவதும் நாளை முதல் வீடு அடங்கி இருக்க வேண்டும் என்று அறிவிப்புச் செய்யப்பட்டிருக்கிறது. ஒரு நாள் முழுவதும் வீட்டிற் குள்ளேயே இருந்துதான் ஆக வேண்டுமா என்று கூட சிலர் நினைக்கலாம். ஆனால் அது இன்று மிக முக்கியமாக செய்தே ஆக வேண்டிய கட்டாயக் கடமை என்பதில் மாற்றுக் கருத்து கொள்ளலாகாது.

### உலகம் முழுவதும் நடவடிக்கைகள்

ஏதோ இந்தியா மட்டும் தான் இந்த கிருமிப் பரவலுக்கு எதிரான நடவடி க்கைகளை எடுத்து வருவதாகக் கருதி விடக் கூடாது. உலகம் முழு வதும் இதற்காக மிகப்பெரிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக் கப்பட்டு வருகிறது. இந்த விஷக் கிருமியின் தாக்குத லிலிருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள் வதற்காகத்தான் இந்த ஏற்பாடு களை உலக நாடு களும் - குறிப் பாக நமது இந்திய அரசும் மேற்கொண்டு வருகிறது.

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

திடீரென "புயல் வருகிறது.. அதனால் பெரும் சேதம் ஏற்படும்.. எனவே பாதுகாப்பாக இருங்கள்!" என்று அறிவிக்கப் பட்டால் நாம் யாரும் அதை விளை யாட்டாக எடுத்துக் கொள் வதில்லை. "வெள்ளம் வரப் போகிறது.. பாதுகாப்பாக முன்னேற் பாடுகளைச் செய்து கொள்ளுங்கள்.." என்று அறிவித்தால் அதை நாம் துச்சமாக எடுத்துக் கொள்ளப் போவதில்லை. "சுனாமி வருகிறது.. கடற் கரை ஓரங்களுக்குச் செல் லாதீர்கள்.." என்று அறி வித்தால், அதை எதிர்த்து - வந்தால் வரட்டும் என்ற தோரணையில் நாம் யாரும் கடற்கரைக்குச் செல்வதில்லை. "எரிமலை வெடிக்கிறது.. அதனால் பெரும் சேதம் ஏற்படும்.." என்று அறிவிப்பு வந்தால் யாரும் அதை அலட்சியப்படுத்த மாட்டார்கள். அந்த அடிப் படையில்தான், இன்று நமக்கு இதுவரை தெரியாத - புரியாத கொரோனா எனும் விஷக்கிருமி பரவி, உலகின் பல்வேறு நாடுகளில் பல்லாயிரக் கணக்கான மக்களது உயிர்களைக் காவு கொள்ளும் இந்த நிலையில், நமது மத்திய - மாநில அரசுகள் இந்தக் கிருமிப் பரவலுக்கு எதிராக பல்வேறு அவசர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அவற்றை யும் நாம் துச்சமாகக் கருதி விடாமல், அரசின் ஒவ்வோர் அறிவிப் பையும் மிக உன் னிப்பாகக் கவனித்து, அவ ற்றை முழுமையாக உள் வாங்கி, அதன் அனைத்து முன்னெச் சரிக்கை நடவ டிக்கைகளுக்கும் முழு ஒத்து ழைப்பளிக்க வேண் டிய அவ சியம் நமக்கு இன்று இருக் கிறது. அண்மையில் இந்திய அரசு கொண்டு வந்துள்ள சி.ஏ.ஏ., என்.ஆர்.சி., என்.பி.ஆர். போன்ற சட்டங்களை நாம் தொடர்ந்து எதிர்த்து வந்திருக்கிறோம். இனி யும் அந்த எதிர்ப்பு வீரி யம் குறையாமல் இனி யும் தொடரும் என் பதில் இருவேறு கருத்திற் கிட மில்லை. அது வேறு விஷயம். ஆனால் இன்று நமது மக்களது விலை மதிக்க முடி யாத உயிரைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் நமக்கும் இருக்கிறது, அரசுக்கும் இருக்கிறது என்பதைக் கருத்திற்கொண்டு, இந்த நாட்டு மக்கள் - குறிப்பாக முஸ்லிம் சமுதாய மக்கள் இது விஷயத்தில் அரசுக்கு முழுமையாகக் கட்டுப்பட வேண்டும். அதை நிச்சயமாகச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நல்லது நடக்க வேண்டும்.

இச்சூழலில், ஒடிசா மாநில முதல்வர் நவீன் பட்நாயக், "ஏப்ரல் 01 முதல் குடியுரிமை, மக்கள்தொகை என எந்தக் கணக்கெடுப்பையும் நடத் தாமல் தள்ளிப்போட வேண்டும்.. இந்தியாவிலிருந்து கொரோனா வைரஸ் தொடர்பான அச்சம் அகன்று, அமைதி நிலவி, நாட்டு மக்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணர்வு வந்த பிறகு கணக்கெடுப்பை நடத்துக!" என்று மத்திய அரசுக்கு ஒரு தெளிவான வேண்டுகோளை முன்வைத்திருக்கிறார். ஒரு மாநில முதலமைச்சரே முன் வைத்துள்ள இந்த வேண்டு கோளையே இந்திய மக்கள் அனைவரின் வேண்டு கோளாகவும் கருதி, மத்திய அரசு இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய மக்கள் என்றுமே எந்த ஆபத்துக் களையும் கண்டு அஞ்சி ஒடுங்குபவர்களல்ல. மாறாக - வெள்ளம், புயல், சுனாமி, போர் என எது வந்தாலும் அவற்றுக்கு முகங் கொடுக்கும் தைரியத்தைக் கொண்டவர்கள். அச்சம் தவிர்த்து, ஆபத்துக்களை எதிர்கொண்டு, வெற்றி கொள்ளும் பாரம்பரியத்தைக் கொண்டவர்கள். அந்த மனோ வலிமையுடன் இந்த விஷக் கிருமிக்கு எதிரான அரசின் அனைத்து நடவ டிக்கைகளிலும் நாம் அனைவரும் ஒன்றுபட்டு, தேசிய உணர்வுடன் கூடிய ஒரே மனதோடு இணைந்து நிற்போம். இந்தக் கொடிய நோய் நம் நாட்டை விட்டும், இந்த உலகை விட்டும் முழு மையாக அகன்றிட நாம் அனைவரும் தூய உள்ளத் துடன் இறைவனைப் பிரார்த்தி ப்போம், நன்றி.

இவ்வாறு பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் பேட்டியில் தெரிவித்துள்ளார்.



## அல்-குர்ஆன் அமுதமொழி

### 38. ஸாத்
**(மக்கீ 38) வசனங்கள்: 88**

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்

*1. ஸாத்; நல்லுபதேசங்கள் நிறைந்த இந்த குர்ஆன் மீது சத்தியமாக!*

*2. (இது நம்மால்தான் அருளப்பட்டது. இதை) நிராகரிப்பவர்கள் பெரும் குரோதத்திலும் விரோதத்திலும் (மூழ்கி) இருக்கின்றனர்.*

*3. இவர்களுக்கு முன்னர், (இவ்வாறு இருந்த) எத்தனையோ வகுப்பாரை நாம் அழித்திருக்கிறோம். (வேதனை வந்த சமயத்தில்) அவர்கள் எல்லோரும் உதவி தேடிக் கூச்சலிட்டார்கள். அது (வேதனையிலிருந்து) தப்பித்துக் கொள்ளக்கூடிய நேரமாய் இருக்கவில்லை.*

*4. (அவர்களுக்கு) அச்சமூட்டி எச்சரிக்கக்கூடிய ஒரு தூதர் (ஆகிய நீர்) அவர்களி(ன் இனத்தி)லிருந்தே அவர்களிடம் வந்ததைப் பற்றி அவர்கள் ஆச்சரியப்பட்டு, "இவர் மிகப் பொய் சொல்லும் சூனியக்காரர்தான்" என்று (உங்களைப் பற்றி) அந்த நிராகரிப்பவர்கள் கூறுகின்றனர்.*

*5. "என்ன! இவர் (நம்) தெய்வங்கள் அனைத்தையும் (பொய்யெனக் கூறி, வணக்கத்திற்குரியவன்) ஒரே ஓர் இறைவன்தான் என்று ஆக்கிவிட்டாரா? மெய்யாகவே, இது ஓர் ஆச்சரியமான விஷயம்தான்" (என்று கூறி,)*

*6. அவர்களிலுள்ள தலைவர்கள் (மற்றவர்களை நோக்கி, 'இவரை விட்டு) நீங்கள் சென்று விடுங்கள். உங்கள் தெய்வங்களை ஆராதனை செய்வதில் நீங்கள் உறுதியாயிருங்கள். (உங்கள் தெய்வங்களைக் கைவிடும் படி கூறும்) இவ்விஷயத்தில் ஏதோ (ஒரு சுயநலம்தான்) கருதப்படுகிறது" என்று கூறிக் கொண்டே சென்று விட்டனர்.*

*7. "முன்னுள்ள வகுப்பார்களிலும், இதை நாம் கேள்விப்பட்டதில்லை. இது (இவரால்) புனையப்பட்டதே தவிர வேறில்லை" என்றும்,*

*8. "நம்மைவிட்டு இவர் பேரில் மட்டும்தானா (வேத) உபதேசம் இறக்கப்பட்டு விட்டது" (என்றும் கூறினார்கள்). அவ்வாறன்று. உண்மையில் இவர்கள் நம் எச்சரிக்கையைப் பற்றியே பெரும் சந்தேகத்தில் இருக்கின்றனர். மேலும், இதுவரை அவர்கள் நம் வேதனையைச் சுவைத்துப் பார்க்கவே இல்லை.*

*9. (வேத உபதேசம் தங்கள் மீது இறங்க வேண்டுமென்று இவர்கள் கூறுவதற்கு) அனைவரையும் மிகைத்த பெரும் கொடையாளியாகிய, உமது இறைவனின் அருள் பொக்கிஷம் அவர்களிடம்தான் இருக்கிறதா?*

*10. அல்லது வானங்கள், பூமி, இன்னும் இவற்றின் மத்தியில் உள்ளவற்றின் ஆட்சி அவர்களுக்கு உரியதுதானா? அவ்வாறாயின், அவர்கள் (இறைவனுடன் போர் புரிவதற்காக) ஏணி வைத்து மேலே ஏறவும்.*

*11. (கேவலம்!) இங்கிருக்கும் இவர்களுடைய கூட்டத்தினர் (எம்மாத்திரம்?) மற்ற கூட்டத்தினர்களைப் போலவே இவர்களும் முறியடிக்கப்படுவார்கள்.*

**அத்:3 – வசனம் 1–11**

**மொழி பெயர்ப்பு: அல்லாமா அப்துல் ஹமீது பாகவி (ரஹ்)**

## அண்ணல் நபி (ஸல்) கன்னல் மொழி

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றார்கள்

"சுவனத்தில் ஒரு சாட்டை வைக்கின்ற சிறிதளவு இடம்கூட உலகம் மற்றும் உலகின் பொருட்களைவிடச் சிறந்ததாகும்.

**(புகாரி, முஸ்லிம்)**

## சிந்தனைக் களஞ்சியம்

ஆரோக்கியம் என்பது மிகப்பெரிய செல்வம் என்கிற மகத்தான உண்மையை நம்மில் பலர் உணர்வதில்லை. நோய் வந்ததும் அதற்காக நாம் பார்க்கிற மருத்துவம், செய்கிற செலவுகள், படுகிற பாடுகள், அவஸ்தைகள் இத்தனைக்கும் பின்தான் ஆரோக்கியத்தின் அருமை புரிகிறது.

**- எஸ்.எம். ரபிஉத்தீன் பாக்கவி**

## தொழுகை நேரம்

**மார்ச் 24 முதல் 31 வரை** (சென்னைக்கு மட்டும்)

| | |
|---|---|
| ஃபஜ்ரு - 4 - 57 | மஃரிப் - 06 - 25 |
| ளுஹர் - 12 - 30 | இஷா - 07 - 35 (ஷாபி) |
| அஸர் - 03 -38 (ஷாபி) | இஷா - 07 - 43 (ஹனபி) |
| அஸர் - 04 -38 (ஹனபி) | |

**சூரிய உதயம் : 06 – 10 அஸ்தமனம் : 06 –20**

செய்தி அனுப்ப மின்னஞ்சல்: manichudardaily@gmail.com

விளம்பரம் மற்றும் நிர்வாக மின்னஞ்சல்: manichudar.ac@gmail.com

சந்தா, விளம்பர கட்டணங்கள் அனுப்ப வங்கிக் கணக்கு

Account Name : **MANICHUDAR**
Account No : **03050200004571**
Bank : **INDIAN OVERSEAS BANK**
Branch : **MUTHIYALPET, CHENNAI-600 001**
IFSC CODE : **IOBA0000305**
SWIFT CODE : **IOBAINBB305**

**என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

# இந்தியர்களை மீட்பதில் துணிச்சலுடனும், மனித நேயத்துடனும் செயல்பட்ட ஏர் இந்தியா நிறுவன ஊழியர் களுக்கு பிரதமர் மோடி பாராட்டு

புதுடெல்லி, மார்ச். 24-

கரோனா வைரஸ் பரவியுள்ள நாடுகளில் சிக்கித் தவித்த இந்தியர்களை துணிச்சலுடனும், மனித நேயத்துடனும் செயல்பட்டு பத்திரமாக மீட்டு வந்த ஏர் -இந்தியா விமான நிறுவன ஊழியர் களுக்கு பிரதமர் நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் தவித்து வந்த இந்தியர் களை சிறப்பு விமானங்கள் மூலம் மீட்கும் பணிகளில் ஈடு பட்ட ஏர் இந்தியாவின் விமானி கள் உள்ளிட்ட ஊழியர் களை அவர் கள் வசிக்கும் பகுதி களைச்சேர்ந்த குடியிருப்பு நலச் சங்கத்தினர் புறக்கணிப்பதாகப் புகார் கள் வந்தன.

இந்நிலையில், ஏர் இந்தியா நிறுவன ஊழியர் களின் சேவைக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது சுட்டுரைப் பக்கத்தில் திங்கள் கிழமை வெளி யிட்டிருந்த பதிவில் கூறியிருப்பதாவது:

துணிச்சலுடனும் மனித நேய த்துடனும் செயல்பட்ட ஏர் -இந்தியா விமான நிறுவன ஊழியர் களின் சேவையைக் கண்டு பெருமை கொள்கிறேன். அவர் களின் தன்னலமற்ற முயற்சிக்கு அனைவரும் பாராட்டு தெரிவித்துள்ளனர் என்று அந்தப் பதிவில் மோடி குறிப்பிட்டுள்ளார்.

இதேபோல், இத்தாலியின் ரோம் நகரில் இருந்து 263 இந்தியர் களை பத்திரமாக அழைத்து வந்த ஏர் இந்தியா விமானத்தின் கேப்டன்கள் ஸ்வாதி ராவல், ராஜா சௌஹான் ஆகியோரின் புகைப்படங்களை விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஹர் தீப் சிங் புரி தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்டு அவர் களுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

ஊடகத்தினருக்கு மோடி பாராட்டு: கரோனா குறித்த தகவல்களை பொது மக்களுக்கு வழங்கி வரும் ஊடகத்தினருக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரி வித்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் இருந்து காணொலி மூலமாக, ஊடகங்களின் பிரதிநிதிகளுக்கு அவர் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

நாட்டு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செய்தியாளர் கள், புகைப்படக் கலைஞர் கள், ஒளிப்பதிவாளர் கள் ஆகியோர் ஓய்வின்றி உழைத்து வருகிறார் கள்.

நாம் மிகப்பெரிய யுத்தத்தை எதிர் கொண்டுள்ளோம். நம் வாழ்நாளின் சவாலான கரோனா வைரஸ் பாதிப்புக்கு புதுமையான கண்டுபிடிப்புகளின் மூலம் தீர்வு காணப்பட வேண்டும். இந்த நேரத்தில் கரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் அரசின் முடிவுகளை துல்லியமாகவும் விரைவாகவும் மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் மொழியில் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டியது அவசியம். கரோனாவின் தீவிரத்தை புரிந்துகொண்டு பொறுப்புடன் செயல்பட்ட செய்தித் தொலைக்காட்சிகள் உள்ளிட்ட அனைத்து ஊடகத்தினருக்கும் நான் நன்றியையும் பாராட்டு களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஊடகத்தினர் அறிவியல்பூர் வமான தகவல்களை மட்டுமே மக்களுக்கு வழங்க வேண்டும் என்றார் பிரமர் மோடி. இந்தச் சந்திப்பின்போது, மத்திய அமைச்சர் பிரகாஷ் ஜாவ டேகர், செய்தி ஒளிபரப்புத் துறை, மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் ஆகியவற்றின் செயலர் கள் உடனிருந்தனர்.

## கொரோனா தடுப்பு நடவடிக்கையாக
# சென்னையில் வீட்டு கண்காணிப்பில் 2,647 பேர்

சென்னை, மார்ச். 24-

கொரோனா தடுப்பு நடவடிக்கை யாக சென்னையில் வீட்டு கண்காணிப்பில் 2,647 பேர் வைக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக, வெளி நாடுகளில் இருந்து வரும் பயணிகள் விமான நிலையத்தில் 'தெர்மல் ஸ்கேனர்' உதவியுடன் காய்ச்சல், சளி உள்ளிட்ட பரிசோதனைக்கு பின்னரே அனுமதிக்கப் படுகின்றனர். மேலும் கொரோனா வைரஸ் அறிகுறியுடன் உள்ளவர்களை மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்படுகின்றனர்.

மேலும் பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து வருகிற பயணிகளை 28 நாள் வீட்டு கண்காணிப்பில் வைத்துள்ளது. இந்த நிலையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வீட்டு கண்காணிப்பில் உள்ள பயணிகள் குறித்து மண்டல வாரியாக தெரிவித்துள்ளது. அதன் விவரம் வருமாறு:-

சென்னையில் வீட்டு கண்காணிப்பில் இருந்து மற்ற மாவட்டங்களுக்கு சென்றவர்களில் 26 பேர் 28 நாட்கள் வீட்டு கண்காணிப்பை முடித்துள்ளனர். 44 பேர் தற்போது வீட்டு கண்காணிப்பில் உள்ளனர். இவர்கள் குறித்த தகவல்கள் அனைத்தும் அந்தந்த மாவட்ட ஆட்சியரிடம் கொடுக்கப் பட்டுள்ளதாக பெருநகர சென்னை மாநகராட்சி கமிஷனர் கோ. பிரகாஷ் தெரிவித்தார்.

# மத்திய பிரதேச முதல்வராக சிவராஜ் சிங் சவுஹான் பதவியேற்றார்

போபால், மார்ச். 24-

மத்தியப் பிரதேச முதல்வராக சிவராஜ் சிங் சௌஹான் திங்கள் கிழமை பதவியேற்றுக் கொண்டார். அவர் முதல்வராவது இது 4-ஆவது முறையாகும்.

மாநில ஆளுநர் மாளிகையில் திங்கள்கிழமை இரவு 9 மணிக்கு நடைபெற்ற எளிமையான நிகழ்ச்சியில் சிவராஜ் சிங் சௌஹானுக்கு ஆளுநர் லால்ஜி டாண்டன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

முன்னதாக, போபாலில் நடைபெற்ற பாஜக எம்எல் ஏக்கள் கூட்டத்தில், பேரவை கட்சித் தலைவராக சிவராஜ் சிங் சௌஹான் ஒருமனதாக தேர் வு செய்யப்பட்டார். அவரது பெயரை மூத்த பாஜக எம்எல்ஏ கோபால் பார் கவா முன்மொழிய, விஜய் ஷா, மீனா சிங், பரஸ் ஜெயின் உள்ளிட்ட மூத்த எம்எல்ஏக்கள் அதனை வழிமொழிந்தனர்.

கரோனா வைரஸ் பாதிப்பு சூழல் காரணமாக, டெல்லியில் உள்ள தலைவர் கள் எவரும் அந்தக் கூட்டத்தில் நேரடியாகப் பங்கேற்க வரவில்லை. கட்சியின் மூத்த தலைவர் களான அருண் சிங் மற்றும் வினய் சஹஸ்ரபுத்தே ஆகியோர் காணொலிக் காட்சி வாயிலாக கூட்டத்தில் பங்கேற்றனர்.

கமல்நாத் தலைமையிலான காங்கிரஸ் அரசு 15 மாதங்களே ஆட்சியில் நீடித்தது. மத்தியப் பிரதேசத்தில் காங்கிரஸ் கட்சியின் முக்கியத் தலைவராக இருந்த ஜோதிராதித்ய சிந்தியா கட்சியில் இருந்து திடீரென ராஜிநாமா செய்து பாஜகவில் இணைந்தார்.

அவருக்கு ஆதரவாக காங்கிரஸ் எம்எல்ஏக்கள் 22 பேரும் தங்களது பதவியை ராஜிநாமா செய்தனர். இதனால் தனது அரசுக்கு நெருக்கடியான சூழல் ஏற்பட்டதை அடுத்து, முதல்வர் பதவியிலிருந்து கமல்நாத் ராஜிநாமா செய்தார். முன்னதாக ராஜிநாமா செய்த 22 எம்எல்ஏக்களும் பாஜகவில் இணைந்தனர்.

இதையடுத்து ஆட்சியமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மை பாஜகவுக்கு கிடைத்ததால், அக்கட்சி ஆட்சியமைக்கும் என்று எதிர் பார்க்கப்பட்டது. இந்நிலையில், சிவராஜ் சிங் சௌஹான் பேரவை கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்டு மாநில முதல் வராக பதவி யேற்றுள்ளார்.

# நடப்பு 2020-21-ம் ஆண்டுக்கான பட்ஜெட்டுக்கு ஜம்மு-காஷ்மீர் மாநிலத்துக்கு ரூ. 1 லட்சம் கோடி ஒதுக்கீடு

## மாநிலங்களவை ஒப்புதல்

புதுடெல்லி, மார்ச். 24-

ஜம்மு-காஷ்மீரின் நடப்பு 2020-21-ஆம் ஆண்டு பட்ஜெட்டுக்கு ரூ. 1 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யும் மசோதா வுக்கு மாநிலங்களவை திங்கள்கிழமை ஒப்புதல் அளித்தது.

இதைதொடர்ந்து மக்களவையின் ஒப்புதலுக்காக இந்த மசோதா அனுப்பி வைக் கப்பட்டது. இத்துடன், மற்றொரு யூனியன் பிரதேசமான லடாக்கின் வரவு-செலவுத் திட்டத் துக்கான மற்றொரு மசோதாவுக்கும் ஒப்புதல் அளித்து மக்களவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

திங்கள்கிழமை 2 மணி நேரத்திற்கும் மேலாக விவாதம் நடத்தப்பட்டு, குரல் வாக்கெடுப்புக்குப்பின் இந்த இரு மசோதாக்களுக்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டன.

முன்னதாக கடந்த மார்ச் 19-ஆம் தேதி ஜம்மு-காஷ்மீர் செலவின மசோதா மக்களவையில் நிறைவேற்றப் பட்டது.

2020-21 ஆம் ஆண்டு ஜம்மு-காஷ்மீரின் மொத்த பட்ஜெட் மதிப்பீடு ரூ. 1,01,428 கோடி ஆகும். இதில் வளர் ச்சித் திட்டங்களுக்கான செலவினம் ரூ. 38,764 கோடி ஆகும். இது கடந்த ஆண்டு பட்ஜெட்டை விட 27 சதவீதம் அதிமாகும்.

நடப்பு நிதியாண்டின் கடைசி 5 மாதங்களுக்கு ரூ. 55,317.81 கோடி மதிப்பில் தனி செலவின அறிக்கையை அரசு முன்வைத்தது.

இதே காலகட்டத்தில் லடாக் யூனியன் பிரதேசத்துக்கு, கடந்த 5 மாதங்களுக்கு மொத்த செலவினமாக ரூ. 5,754 கோடி நிர் ணயிக்கப்பட்டிருந்தது. அதன்படி ரூ. 4,618.35 கோடி மூலதன செலவினமாகவும், ரூ. 1,135.65 கோடி வருவாயின செலவுகளாகவும் இருந்தது.

# மக்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதை நிறுவனங்கள் உறுதிப்படுத்த வேண்டும்

## பிரதமர் மோடி அறிவுரை



புதுடெல்லி, மார்ச். 24-

நாட்டில் கரோனா வைரஸ் (கொவைட்-19) பரவல் அதிகரித்து வரும் சூழலில், மக்களுக்கான அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப் பாடின்றி கிடைப்பதை அவற்றைத் தயாரிக்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடி அறிவுறுத்தினார்.

நாடு முழுவதும் கரோனா வைரஸின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. பல மாநிலங்களில் ஊரடங்கு உத்தரவும் 144 தடையுத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக அத்தியாவசியப் பொருள் களுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சத்தில் அவற்றை மக்கள் அதிக அளவில் வாங்கிக் குவித்து வருகின்றனர்.

அதனால் அத்தியாவசியப் பொருள்களின் தேவை அதிகரித்துள்ளது. இந்தச் சூழலில், தொழில் நிறுவனங்களின் தலைவர் களுடன் காணொலி வாயிலாக பிரதமர் மோடி திங்கள்கிழமை ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் கூறியதாவது:

கரோனா வைரஸ் பரவல் காரணமாக பல்வேறு துறைகள் முடங்கியுள்ளன. முக்கியமாக சுற்றுலாத் துறை, கட்டுமானத் துறை உள்ளிட்டவை அதிக அளவில் பாதிப்பைச் சந்தித்துள்ளன.

தற்போதைய சூழலில், அத்தியாவசியப் பொருள்களின் தயாரிப்பு பாதிக்கப்படக் கூடாது. அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கப் படுவதையும், கள்ளச் சந்தைகளில் விற்கப் படுவதையும் தடுக்க வேண்டும் என்றார் பிரதமர் மோடி.

கரோனா வைரஸ் பரவல் அச்சத்தால் கை சுத்திகரிப்பான், முகக் கவசம் ஆகியவற்றுக்கான தேவை அதிகரித்துள்ளது. எனவே, அவற்றை அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தில் மத்திய அரசு அண்மையில் இணைத்தது நினைவு கூரத்தக்கது.

# தமிழகத்தில் மார்ச் 31-ந் தேதி வரை 144 தடை உத்தரவு

## பேருந்து, ஆட்டோ, டாக்ஸி இயங்காது

சென்னை, மார்ச் 24 -

தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க செவ்வாயன்று (மார்ச் 24) மாலை 6 மணி முதல் 31ந் தேதி வரை 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி அறிவித்துள்ளார். சட்டப் பேரவையில் திங்களன்று (மார்ச் 23) இதுகுறித்து அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதில் கூறியிருப்பதாவது:

இந்தியாவில் கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப் பட்ட நபர்கள் உள்ள 75 மாவட்டங் களில், தீவிர நோய் கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் சில வழிமுறைகளை மத்திய அரசு பரிந்துரைத்துள்ளது. தனிமைப் படுத்துதல் (social distancing) என்ற முறையை தீவிரப்படுத்த, நோய் பாதித்த நபர்கள் உள்ள மாவட்டங்களில் சில கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது.

கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட நபர்கள் உள்ள மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், ஈரோடு உள்பட தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும், போக்குவரத்து மற்றும் பொது மக்களின் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த, தொற்று நோய்கள் சட்டம், 1897ல் ஷரத்து 2ன்படி மாவட்ட எல்லை கள் மூடப்படும். இந்த உத்தரவு மார்ச் 24 மாலை 6 மணி முதல் 31ஆம் தேதி வரை நடைமுறையில் இருக்கும். இந்த அறி விக்கையை தீவிரமாக அமல் படுத்த அனைத்து காவல் ஆணையர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 144 கீழ் உரிய உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும்.

### கட்டுப்பாடுகள் விவரம் :

1. அத்தியாவசிய மற்றும் அவசரப் பணிகள் தவிர மற்ற பொது மற்றும் தனியார் போக்கு வரத்து, மகிழுந்துகள், ஆட்டோ, டாக்ஸி போன்றவை இயங்காது. மாநிலங்களுக்கு இடையேயும், மாவட்டங்களுக்கு இடையேயுமான போக்குவரத்து அத்தியாவசிய இயக்கத்திற்கு தவிர மற்ற இயக்கம் முற்றிலும் தடை செய்யப்படுகிறது.

2. அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் பால், காய்கறி, மளிகை, இறைச்சி, மீன்கடைகள் போன்றவை தவிர அனைத்து கடைகளும், வணிக வளாகங்களும், பணிமனைகளும் இயங்காது.

3. அத்தியாவசியத் துறைகள் மற்றும் அலுவலகப் பணிகள் தவிர மற்ற அரசு அலுவலகங்கள் செயல்படாது. அத்தியா வசியப் பணிகளை மேற்கொள்ளும் அரசுத் துறைகளான மாவட்ட நிர்வாகம், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை, சிறைத் துறை, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவத் துறை, நீதிமன்றங்கள், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவை தொடர்ந்து இயங்கும். எனினும், தனிநபர் சுகாதார நடவடிக்கை உட்பட அனைத்து நோய்த்தடுப்பு முன்னெச்சரிக்கைநடவடிக்கைகளும் அலுவலகங்களில் பின்பற்றப்பட வேண்டும்.

4. தனியார் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப மற்றும் உயிர் தொழில்நுட்ப தொழில் அலுவலகப் பணியாளர்கள் வீட்டில் இருந்தே வேலை செய்ய வேண்டும். எனினும், அத்தியாவசிய பணிகளையும் மருத்துவம் உள்ளிட்ட பணிகளையும் மேற்கொள்ளும் தனியார் நிறுவனங்கள் மற்றும் மருத்துவ மனைகள் தொடர்ந்து இயங்கும்.

5. அத்தியாவசியமானப் பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலைகள் மற்றும் ஏற்றுமதி நிறுவனங்கள் குறைந்த பணியாளர்களு டன் இயங்க அனுமதிக்கப் படுகிறது.

6. அத்தியாவசிய கட்டப் பணிகள் தவிர பிற கட்டப் பணிகளுக்கு தடை விதிக்கப் படுகிறது. எனினும், இந்த நாட்களில் வேலைக்கு வராத தொழிலாளர்களுக்கு சம்பள நிறுத்தம் செய்யக் கூடாது.

7. வீடுகள் அல்லாமல், விடுதி கள் மற்றும் பிற இடங்களில் தங்கியிருக்கும் பல்லாயிரக் கணக்கான பணியாளர்களின் நலன் கருதி, பார்சல் மூலம் மட்டும் உணவு வழங்கும் வகையில் உணவகங்கள் திறந்திருக்க அனுமதிக்கப்படும். அம்மா உணவகங்கள் வழக்கம் போல செயல்படும்.

### சுயமாக தனிமைப்படுத்திக் கொள்ளுங்கள்

வெளிநாடுகளில் இருந்து வந்துள்ள நபர்கள் சுயமாகவே தங்களை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். தங்களுக்கு நோய் அறிகுறி வருகிறதா என கண்காணித்து அரசு மருத்துவ மனைகள் அல்லது அனுமதிக்கப்பட்ட தனியார் மருத்துவ மனைகள் மூலமோ பரிசோத னைகள் மேற்கொள்ள வேண்டும். நோய் பாதிப்பு உறுதியானால் உரிய மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். குடும்ப உறுப்பினர்களுக்கு நோய் தொற்று ஏற்படாத வண்ணம் செயல்பட வேண்டும்.

வெளிநாடு சென்று திரும்பிய நபர்களுடன் நேரடி தொடர்பு இல்லை என்றாலும், இந்நோய் தொற்றின் கடுமையை உணர்ந்து நோய் தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்பு உள்ளதை கருத்தில் கொண்டு, இந்த நோய்க்கான அறிகுறி உள்ளவர்கள் உடனடியாக அரசு மருத்துவமனையோ அல்லது அனுமதிக்கப்பட்ட தனியார் மருத்துவமனைகள் மூலமோ மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இந்த தடை உத்தரவால், கர்ப்பிணிப் பெண்கள், முதியோர் ஆகியோருக்கு ஏற்படும் இடை யூறுகளை அறிந்து, அவற்றை தணிக்க உரிய நடவடிக்கை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எடுக்க வேண்டும்.

இத்தடைக் காலத்தில் அத்தியா வசியப் பொருட்களான உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் போன்றவற்றின் போக்கு வரத்துக்கும், விற்பனை க்கும் யாதொரு தடையும் இல்லை. நோய்த் தடுப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது. இதற்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும். அரசு எடுத்து வரும் இந்த கடுமையான நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்க வேண்டும் இவ்வாறு முதலமைச்சர் அதில் தெரிவித்துள்ளார்.

## பணியாளர்கள் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்
# நியாய விலைக் கடைகளில் ஒரு மீட்டர் இடைவெளியில் நிற்க ஏற்பாடு: தமிழக அரசு உத்தரவு

சென்னை, மார்ச். 24-

நியாய விலைக் கடைகளில் ஒருவரோடு ஒருவர் நெருங்கி நிற்பதைத் தவிர் க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட இடைவெளிகளில் குடும்ப அட்டைதாரர் கள் நிற்கும் வகையில் கோடுகள் வரையப்பட்டுள்ளன. கரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து தடுத்துக் கொள்ள நியாய விலைக் கடைப் பணியாளர் களுக்கு பல்வேறு அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன. அவற்றை தீவிரமாகக் கண்காணிக்குமாறு கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் அந்தோணிசாமி ஜான் பீட்டர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக திங்கள் கிழமை அவர் அனுப்பியுள்ள சுற்றறிக்கை விவரம்:

அனைத்து நியாய விலைக் கடைகளும் உரிய நேரத்தில் திறக்கப்பட வேண்டும். அத்தியாவசியப் பொருள்கள் அனைத்தும் நியாய விலைக் கடைகளில் போதுமான அளவு இருப்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அனைத்து நியாய விலைக் கடைப் பணியாளர் களும் முகக் கவசம் அணிந்திருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அனைத்து நியாய விலைக் கடைப் பணியாளர் களும் பணி நேரத்தில் அடையாள அட்டை அணிந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும். நியாய விலைக் கடைப் பணியாளர் களுக்கும், கடைக்கு வரும் குடும்ப அட்டைதாரர் களுக்கும் தேவையான அளவு கிருமி நாசினி இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

குடும்ப அட்டைதாரர் களுக்கு அத்தியாவசியப் பொருள்களை சுழற்சி முறையில் வழங்கி கடைகளில் கூட்டம் அதிகம் சேருவதைத் தவிர் க்க வேண்டும். நியாய விலைக் கடைகளுக்கு வரும் குடும்ப அட்டைதாரர் கள் ஒருவரோடு ஒருவர் நெருங்கி நிற்பனைத் தவிர் க்கும் விதமாக தனிமைப்படுத்துதல் எனும் நடைமுறையை தீவிரமாகப் பின்பற்ற வேண்டும் என்று சுற்றறிக்கையில் கேட்டுக் கொண் டுள்ளார்.



**சேலம், சங்ககிரி சாலை, அரியனூர் சீரகாபாடியில் உள்ள விநாயகா மிஷன் கிருபானந்தா வாரியம் மருத்துவக் கல்லூரியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று ஏற்படும் நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதற்காக தனிமை வார்டுகள் அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர் சி.அ. ராமன் நேற்று 23.03.2020 நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

# கொரோனா வைரசால் வேலையிழந்த 20 கோடி பேருக்கு தலா ரூ.10 ஆயிரம் நிதியுதவி வழங்க வேண்டும்

### கச்சா எண்ணெய் வீழ்ச்சியால் கிடைக்கும் சேமிப்பு பணத்தை பயன்படுத்த வேண்டும்; இந்திய தொழிலக கூட்டமைப்பு கோரிக்கை

புதுடெல்லி, மார்ச் 24-

கொரோனா வைரஸ் தாக்கத்தால், நாட்டில் சுமார் 20 கோடி பேர் வேலை யிழந்துள்ளதாகவும், அவர்களுக்கு தலா ரூ. 5 ஆயிரம் முதல் ரூ. 10 ஆயிரம் வரை நிதியுதவி வழங்க வேண்டும் என்றும் இந்திய தொழிலக கூட்டமைப்பு *(Confederation of Indian Industry-CII)* வேண்டு கோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக பிரதமர் அலுவ லகத்தில் சமர்ப் பித்துள்ள கடிதத்தில், சிஐஐ மேலும் குறிப்பிட்டிருப்பதாவது: கொரோனா வைரஸ் பரவல் மிகவும் தீவிரம் அடைந்துள்ளதால் இந்திய தொழில் நிறுவனங்கள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன. அன்றாட ஊதியத்தை நம்பி வாழும், பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேலையிழந்து, வருமானம் இன்றி திணறி வருகின்றனர். இந்தச் சூழ் நிலையில் ஆண்டு வருமானம் ரூ. 5 லட்சத்துக்கு கீழே இருக்கும் இளை ஞர்களுக்கு ரூ. 5 ஆயிரம் என்ற அளவிலும், 60 வயது மேற்பட்டவர்களுக்கு ரூ. 10 ஆயிரம் அளவிலும் உத வித்தொகை நேரடியாக அவர்களுடைய கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

கொரோனா வைரஸால் வர்த்தகம் முடங்கும். விளைவாக பொருளாதார வளர்ச்சி தடைபடும். இதை எதிர்கொள்ளும் விதமாக நிதிக் கொள்கை கள் வகுக்கப்பட வேண்டும். நாட்டின் ஜிடிபி-யில் 1 சதவிகிதத்தை, அதாவது ரூ.2லட்சம்கோடியைவருமான இழப்பைச் சந்தித்தவர்களுக்கு வழங்கு வதற்கு ஒதுக்க வேண்டும். தற்போது கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இதன் மூலம் அரசு தனது சேமிப்பை அதிகரிக்க முடியும். அந்த சேமிப்பு தொகையை இத்திட்டங் களுக்குப் பயன்படுத்தலாம். ரூ. 2 லட்சம் கோடியை ரூ.10 ஆயிரம் என்று பகிர்ந்தளித்தால் 20 கோடி பேருக்கும், ரூ. 5 ஆயிரம் என்று பகிர்ந்தளித்தால் 40 கோடி பேருக்கும் வழங்க முடியும்.

இந்தியாவில் மொத்தம் 20 கோடி பேர் சாதா ரண தொழிலாளர்களாக உள்ளனர். இவர்கள்தான் அதிக பாதிப்பைச் சந்திக்கின்றனர். அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் மத்திய அரசு கொள்கை முடிவுகளை எடுக்க வேண்டும். அதேபோல் வறுமைக்கோட்டுக்கு கீழ் இருப்ப வர்களுக்கும், தினக் கூலி பெறுபவர்களுக்கும் ஒரு மாதம் ரேசன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். பங்குச் சந்தையை மீட்டெடுக்கும் வகையில் வரி தொடர்பாக அறிவிப்புகள் வெளியிடப்பட வேண் டும். நீண்ட கால மூலதன ஆதாயங்களுக்கான 10 சதவிகித வரியை முழுதாக நீக்க வேண்டும். தனி யார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவையை மத்திய அரசு உடனே வழங்க வேண்டும்.

விமானத்துறை, விடுதிகள், சிறு குறு நிறு வனங்கள், ரியல் எஸ்டேட் ஆகிய துறைகள் மிகக் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளன. இத்துறைகளை மீட்டெடுக்கும் வகையில் வரித் தள்ளுபடி உள்ளிட்ட பொருளாதார சலுகைத் திட்டங்கள் அறிவிக்கப்பட வேண்டும். ஜிஎஸ்டி செலுத் துவது தொடர்பாக கூடு தல் அவகாசம் வழங்க வேண்டும். அதேபோல் ரிசர்வ் வங்கி தற்போதைய சூழலை எதிர்கொள்ளும் வகையில் நிதிக் கொள்கைகளை வகுக்க வேண்டும். ரெப்போ விகிதம் 50 புள்ளி கள் அளவில் குறைக்கப்பட வேண்டும். அதேபோல் வராக் கடனுக்கான வரையறையை மாற்ற வேண்டும். அதன் வரம்பான 90 நாட்களை 180 நாட்களாக உயர்த்த வேண்டும். இவ்வாறு சிஐஐ வலியுறுத்தியுள்ளது

### கொரோனா வைரஸ் தீவிரம் அடைந்து வரும் நிலையில்

# நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைப்பு

புதுடெல்லி, மார்ச்.24-

நாட்டில் கரோனா வைரஸ் (கொவைட்-19) பரவல் தீவிரமடைந்து வரும் சூழலில், நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் திங்கள்கிழமை தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டன.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் பகுதி கடந்த ஜனவரி 31-ஆம் தேதி முதல் பிப்ரவரி 11-ஆம் தேதி வரை நடைபெற்றது. கூட்டத் தொடரின் இரண்டாவது பகுதி கடந்த 2-ஆம் தேதி தொடங் கியது. அந்தக் கூட்டத் தொடரானது ஏப்ரல் 3-ஆம் தேதி நிறைவடைவதாக இருந்தது.

எனினும், நாட்டில் கரோனா வைரஸ் தீவிரமாகப் பரவி வருவதால் பட்ஜெட் கூட்டத் தொடரை முன்கூட்டியே முடித்துக் கொள்ள வேண்டுமென எதிர்க்கட்சிகள் தரப்பில் மத்திய அரசுக்குக் கோரிக்கை விடுக்கப் பட்டது. ஆனால், பட்ஜெட் கூட்டத்தொடர் திட்டமிட்டபடி நடைபெறும் என்று மத்திய அரசு தெரிவித்திருந்தது.

இந்நிலையில், மக்களவையிலும் மாநிலங் களவையிலும் கூட்டத் தொடர் திங்கள்கிழமை பிற்பகல் 2 மணிக்குத் தொட ங்கியது. எனினும், கரோனா வைரஸ் பரவல் அச்சம் காரணமாக திரிண மூல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ஆகியவற்றின் எம்பிக்கள் கூட்டத்தொடரில் பங்கேற்கவில்லை.

இந்தச் சூழலில், அன்றாட நிகழ்வுகள் நிறைவடைந்த பிறகு மக்களவையைத் தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைப்பதாக அவைத் தலைவர் ஓம் பிர் லா அறிவித்தார்.

கைகள் தட்டி பாராட்டு: இதனிடையே, நாட்டு மக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடைப்பிடித்த சுய ஊரடங்கு குறித்து ஓம் பிர் லா பேசினார். அப்போது, மருத்துவர் கள், சுகாதாரப் பணியாளர் கள் ஆகியோரின் சேவைகளைப் பாராட்டும் விதமாக அவைத் தலைவர் ஓம் பிர் லா, பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்ட அனைவரும் கைகளைத் தட்டினர்.

முன்னதாக, கடந்த 1931-ஆம் ஆண்டு மார் ச் 23-ஆம் தேதி தூக்கிலிடப்பட்ட சுதந்திரப் போராட்ட வீரர் களான பகத் சிங், ராஜ்குரு, சுக்தேவ் ஆகியோருக்கு அவையில் அஞ்சலி செலுத்தப்பட்டது. அதே போல், சத்தீஸ்கரின் சுக்மா மாவட்டத்தில் கடந்த சனிக்கிழமை நக்ஸல்களுடனான தாக்குதலின் போது வீர மரணமடைந்த 17 பாதுகாப்புப் படையினருக்கும் மக்களவை உறுப்பினர் கள் அஞ்சலி செலுத்தினர். மாநிலங்களவையிலும் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப் பட்டது.

மாநிலங்களவை ஒத்தி வைப்பு: கரோனா வைரஸ் பரவல் காரணமாக மாநிலங் களவையை ஒத்திவைப்பது குறித்து பல்வேறு கட்சி எம்பிக்களுடன் அவைத் தலைவர் வெங்கய்ய நாயுடு திங்கள்கிழமை ஆலோசனை நடத்தினார். பின்னர் மாநிலங் களவையில் அவர் கூறியதாவது: கரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய, மாநில அரசுகள் தொடர் ந்து மேற்கொண்டு வருகின்றன. அவற்றுக்கு மக்கள் ஒத்துழைப்பு அளித்து வருவது பாராட்டத்தக்கது. நாடு அசாதாரண சூழலை எதிர் கொண்டு வரும் வேளையில், மக்கள் அனைவரும் கடந்த ஞாயிற்றுக் கிழமை ஒன்றிணைந்து செயல் பட்டது சிறப்பானது.

இத்தகைய கடினமான சூழலில் பணியாற்றி வரும் மருத்துவர் கள், செவிலியர் கள், சுகாதாரப் பணியாளர் கள் உள்ளிட்டோரின் சேவையை மக்கள் அனைவரும் பாராட்டியது மனநெகிழ்வை அளித்தது. இந்தச் சூழலில் மக்களுக்குப் பல்வேறு கட்டுப் பாடுகள் விதிக்கப்பட்டு வருகின்றன. அவை மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத் தலாம்.

ஆனால், அசாதாரண சூழலில் வழக்கத்துக்கு மாறான முடிவுகளை எடுக்க வேண்டியது அவசியம். இந்த அசாதாரண சூழலில் இருந்து நாடு விரைவில் மீளும். எனவே, மத்திய, மாநில அரசுகளின் உத்தரவுகளை மக்கள் முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார் வெங்கய்ய நாயுடு.

இதைத் தொடர் ந்து, மாநிலங் களவையைத் தேதி குறிப்பிடாமல் அவர் ஒத்திவைத்தார்.



**காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் உத்தரவுப்படி, குன்றத்தூர் வட்டாட்சியர் சு.ஜெயசித்ரா, குன்றத்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் எம்.வெங்கடேஷ், காவல் துணை ஆய்வாளர் தமிழ்செல்வி ஆகியோர் கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கைக்காக, நேரடியாக களப்பணியில் ஈடுபட்டு, குன்றத்தூர் வட்டத்திற்குட்பட்ட மாங்காடு, கொளப்பாக்கம், படப்பை, உள்ளிட்ட அனைத்து இடங்களிலும் ஆய்வு மேற்கொண்டு, வணிக வளாகங்கள், கடைகள், ஓட்டல்கள் போன்றவற்றை மூடும்படி அறிவுறுத்தினர். சிறப்பு நிலை பேரூராட்சி செயல் அலுவலர் எம்.வெங்கடேஷ் தலைமையில் "30க்கும் அதிக மானோர் கொண்ட குழுவினர் கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.**

# கொரோனா பாதித்த நாடுகளிலிருந்து சென்னை திரும்பிய 3 ஆயிரம் பேர்களின் வீடுகளில் எச்சரிக்கை நோட்டீஸ்

சென்னை, மார்ச்.24-

கரோனா பாதித்த நாடுகளில் இருந்து சென்னை திரும்பிய 3, 682 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளதுடன், சமூகப் பரவலைத் தடுக்கும் வகையில் அவர்கள் தங்கியுள்ள 3 ஆயிரம் வீடுகளின் முகப்புகளில் எச்சரிக்கை நோட்டீஸ் ஒட்டப் பட்டுள்ளது.

கரோனா முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சென்னை மாநகராட்சி சார்பில் பொது இடங்களை கிருமி நாசினி மூலம் தூய்மைப் படுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக, கடந்த பிப்ரவரி மாதத்தில் இருந்து வெளிநாடுகளில் இருந்து சென்னைக்கு வந்த வர் களின் குறித்த தகவல் அண் மையில் சேகரிக்கப் பட்டது.

அதன்படி, சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட 15 மண்டலங்களில் 3, 682 பேர் வெளிநாடு களில் இருந்து சென்னைக்கு திரும்பி யுள்ளது தெரியவந்தது. இதையடுத்து, அவர் கள் வீடுகளில் தனிமைப் படுத்தப் படுத்தப் பட்டு தீவிரக் கண்காணி ப்பில் வைக்கப் பட்டுள்ளனர். இந் நிலையில், தனிமைப் படுத்தப்பட்ட வீடுகளை அடையாளப்படுத்தவும், சமூகப் பரவலைத் தடுக்கும் வகையில் மாநகராட்சி சார் பில் அந்த வீடுகளின் முகப் புகளில் எச்சரிக்கை நோட்டீஸ் ஒட்டப் பட்டுள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி ஆணையர் கோபிரகாஷ் வெளி யிட்ட செய்திக் குறிப்பில், 'கடந்த பிப்ரவரி மாதம் முதல் தற்போது வரை வெளி நாடுகளில் இருந்து வந்து சென்னை மாநகராட்சிப் பகுதியில் தங்கியுள்ள 3, 682 பேர் வீடுகளில் தனிமைப் படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள 3 ஆயிரம் வீடுகளின் முகப்பு களில் எச்சரிக்கை நோட்டீஸ் ஒட்டப் பட்டுள்ளது. அந்த நோட்டீஸில் 'கரோனா தொற்று, தனிமைப் படுத்தப் பட்ட வீடு, உள்ளே நுழையாதே' என்ற வாசகங்கள் அச்சிடப்பட்டுள்ளதுடன், அவர் எந்த நாட்டிலிருந்து வந்துள்ளார். அவரது பெயர், முகவரி, எத்தனை பேர் தங்கியுள்ளனர் என்ற விவரங்கள் அடங்கியுள்ளன. இதன் மூலம், தனிமைப் படுத்தப்பட்ட வீடுகளை அக்கம் பக்கத்தினர் எளிதில் அடையாளம் காணவும், சமூகப் பரவலைக் கட்டுப்படுத்தவும் முடியும். மேலும், கரோனா குறித்து சந்தேகங்கள் மற்றும் அரசு வைத்துள்ள பட்டியலில் இல்லாத வெளிநாட்டில் இருந்து வந்தவர் கள் 104 மற்றும் சென்னை மாநகராட்சியின் உதவி மைய எண்கள் 044 25384520, 29510400, 29510500 என்ற தொலைபேசி எண்களிலும் 94443 40496, 87544 48477 என்ற செல்லிடப்பேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் உள்ள தொழில் நிறுவனங்களும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும்

### பிரியங்கா காந்தி சுட்டுரையில் பதிவு

புதுடெல்லி, மார்ச்.24-

கொரோனா வைரஸ் தடுப்பு முயற்சிகளுக்கு உதவுமாறு தொழில் அதிபர்களுக்கு பிரியங்கா அழைப்பு விடுத் துள்ளார்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா தனது 'டுவிட்டர்' பக்கத்தில் கூறியிருப்பதாவது:- சுகாதார சேவையில், இந்தியா எப்போதும் சந்திக்காத மாபெரும் சுமையை சந்தித்து வருகிறது. இந்த நேரத்தில் தொழில், வர்த்தக நிறுவனங்களின் ஆதரவு தேவை.

உலகம் முழுவதும் உள்ள நாடுகளில், கொரோனா வைரஸ் தடுப்புக்கு பயன்படும் மருத்துவ தயாரிப்புகள் மற்றும் உபகரணங்கள் வினியோகத்துக்கு தொழில் நிறுவனங்கள் நிதிஉதவி வழங்கி வருகின்றன. அதுபோல், இந்தியாவில் உள்ள தொழில் நிறுவனங்களும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# உலகச் செய்திகள்

## உலகில் நடைபெறும் அனைத்து போர்களையும் உடனடியாக நிறுத்துங்கள்: ஐ.நா. பொதுச்செயலாளர்



சீனாவின் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது உலகின் 195 நாடுகளுக்கு பரவியுள்ளது.

மனித குலத்துக்கே மிகப்பெரும் அச்சுறுத்தலாக விளங்கி வரும் இந்த வைரஸ் இதுவரை 3 லட்சத்து 78 ஆயிரத்து 394 பேருக்கு பரவியுள்ளது. இவர்களில் 16 ஆயிரத்து 491 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், இந்த வைரஸ் தாக்குதல் காரணமாக 2 லட்சத்து 60 ஆயிரத்து 319 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். வைரஸ் பாதிக்கப்பட்டவர்களில் இதுவரை 1 லட்சத்து ஆயிரத்து 584 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளனர்.

உலகையே அச்சுறுத்திவரும் இந்த வைரசுக்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்க பல்வேறு நாடுகள் தீவிர முயற்சி மேற்கொண்டுவருகின்றன.

ஒரு பக்கம் கொரோனா வைரஸ் உலகையே ஆட்டிப் படைத்துவரும் நிலையில் மறுபக்கம் பல்வேறு நாடுகளில் உள்நாட்டுச்சண்டை, பயங்கரவாத தாக்குதல்கள் என இடைவிடாமல் போர்கள் அரங்கேறித்தான் வருகிறது.

இந்நிலையில், உலகில் நடைபெறும் அனைத்து உடனடியாக நிறுத்தும்படி உலக நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அண்டோனியோ குட்டரஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து இன்று அவர் கூறுகையில், '' உலகின் அனைத்து பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர்களையும், சண்டைகளையும் உடனடியாக நிறுத்தும்படி நான் அழைப்பு விடுக்கிறேன்.

விரோதங்கள், அவநம்பிக்கை, பகைமை ஆகியவற்றில் இருந்து பின்வாங்கி ஆயுத சண்டைகளை முடிவுக்கு கொண்டு வாருங்கள். நாம் அனைவரும் ஒன்றிணைந்து நமது உயிரை காக்க உண்மையான போர் செய்யும் (கொரோனா வைரஸ்) நேரம் வந்து விட்டது'' என்றார்.

## கோரத்தாண்டவமாடும் கொரோனா: கட்டுப்படுத்த முடியாமல் திணறும் நாடுகள்!

கொரோனா வைரஸ் காரணமாக இத்தாலியில் நேற்றைய தினத்தில் மட்டும் 650 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதன்காரணமாக கடந்த ஒருவாரத்திற்குள் அங்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

சீனாவில் பரவத் தொடங்கிய கொரோனா வைரஸ் பாதிப்பால் அங்கு 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் ஐரோப்பிய நாடான இத்தாலி கொரோனாவின் பிடியில் சிக்கி சின்னாபின்னமாகி வருகிறது.

அங்கு சுமார் 60 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் புதிதாக 5 ஆயிரத்து 500 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே அங்கு 5 ஆயிரத்து 500 பேர் வரை உயிரிழந்துள்ள நிலையில் நேற்றைய தினத்தில் மாத்திரம் 650 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளமையானது உலக மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

இத்தாலிக்கு அடுத்தபடியாக மற்றெரு ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் ஏற்கனவே ஆயிரத்து 700 இற்கும் அதிகமானோர் கொரோனா தொற்றினால் உயிரிழந்திருந்த நிலையில் நேற்றைய தினத்தில் மாத்திரம் 375 பேர் உயிரிழந்துள்ளனர்.



ஸ்பெயினில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டும் 375 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த எண்ணிக்கையின்மூலம் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் ஈரானைப் பின்னுக்குத் தள்ளி ஸ்பெயின் 3வது இடத்தில் உள்ளது.

இந்த நாடுகளைத் தொடர்ந்து நேற்று ஒரே நாளில் ஈரானில் 129 பேரும், பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவில் தலா 112 பேரும் கொரோனாவினால் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உலகம் முழுவதும் இதுவரையில் மொத்தமாக 14, ஆயிரத்து 703 பேர் உயிரிழந்துள்ளனர்.

## கொரோனா பீதிக்கு இடையில் ஆப்கானிஸ்தான் வந்தார் அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி



ஆப்கானிஸ்தான் நாட்டின் அதிபராக சமீபத்தில் அஷ்ரப் கானி மீண்டும் பதவியேற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்டு தோற்ற அப்துல்லா அப்துல்லாவும் அதேநாளில் தன்னை அந்நாட்டின் அதிபராக அறிவித்துள்ளார்.

தற்போது அங்கு இரட்டை அதிகார ஆட்சிமுறை அமலில் இருப்பதுபோல் தோன்றினாலும் உலக நாடுகளில் பெரும்பாலானவை அஷ்ரப் கானி தலைமையைத்தான் அங்கீகரித்துள்ளன.

இந்த அதிகாரப் போட்டிக்கு இடையில் அமெரிக்காவின் ஏற்பாட்டின்பேரில் ஆப்கானிஸ்தான் தலிபான்களுடன் கடந்த மாதம் ஏற்படுத்திய சமாதான உடன்படிக்கை பெரிய அளவில் பலன் அளிக்கவில்லை.

அரசுப் படைகளும் தலிபான் படையினருக்கும் இந்த உடன்படிக்கைக்கு மதிப்பளிக்காமல் வழக்கம்போல் இருதரப்பினரும் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், இந்த சமாதான உடன்படிக்கைக்கு புத்துயிர் அளிப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தும் நோக்கத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி மைக் பாம்பியோ அவசரப் பயணமாக இன்று ஆப்கானிஸ்தான் தலைநகர் காபுல் வந்தடைந்தார்.

## கொரோனாவை கட்டுப்படுத்த உதவத் தயார்: உலக நாடுகளுக்கு சீனா அறிவிப்பு



சீனாவின் வூஹான் நகரில் தான் கொரோனா வைரஸ் உருவாகி உலக நாடுகளுக்குப் பரவியது. இந்நிலையில் அங்கு கொரோனா வைரஸால் பாதிக்கப் படுபவர்களின் எண்ணிக்கை கட்டுப் படுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்து 5வது நாளாக அங்கு புதிதாக வைரஸால் பாதிக்கப் பட்டவர்கள் யாருமில்லை என்ற முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த நோயைக் கட்டுப்படுத்த உலக நாடுகளுக்கு உதவத் தயார் என்று சீனா அறிவித்துள்ளது.

சீனாவில் கொரோனா வைரஸ் பரவல் தடுப்புப்பணியில் ஈடுபட்ட மருத்துவர்களில் சிலர், வெளிநாடுகளுக்குச் சென்று, அங்குள்ள மருத்துவர்களுக்கு நேரடியாக உதவியளித்து வருகின்றனர். சிலர் இணையத்தின் மூலமும், வெளிநாடுகளுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு உலகெங்கிலும் இருந்து பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

மார்ச் 19ம் தேதி கரோனா வைரஸ் பரவல் தடுப்புக்கான சர்வதேசப் பரிமாற்றக்கூட்டத்தில், ஸொங் நான்ஷான் உள்ளிட்ட புகழ்பெற்ற சீன நிபுணர்கள் பலர், உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்களுடன் சீனாவின் அனுபவங்களையும், வழிமுறைகளையும் பகிர்ந்து கொண் டனர்.

மேலும், 4 முறை நடைபெற்ற கரோனா வைரஸ் பரவல் தடுப்புக்கான சீன-ஐரோப்பிய வீடியோ கான்பரன்ஸ் மூலம், ஐரோப்பாவின் அனைத்து நாடுக ளுடன் தொடர்புடைய வழிமுறைகள் மற்றும் தகவல்களை சீனா பகிர்ந்து கொண்டுள்ளது. இதுவரை 82 நாடுகளுக்கும், உலகச் சுகாதார அமைப்பு மற்றும் ஆப்பிரிக்க ஒன்றியத்துக்கும் உதவியளிக்க உள்ளதாக சீனா அறிவித்துள்ளது. வைரஸ் நோயைக் கட்டுப்படுத்தும் வரை தொடர்ந்து உதவியளிக்க சீனா தயாராக உள்ளது என்று அந்நாட்டு அரசு அறிவித் துள்ளது.

இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஜெங் ஷுவாங் நேற்று கூறும்போது, "19 நாடுகளுக்கு மருத்துவ ரீதியிலான ஆலோசனைகளை வழங்க சீனா முடிவு செய்துள்ளது. கரோனா வைரஸால் சீனா பாதிக்கப்பட்டபோது இந்தியா பல உதவிகளைச் செய்தது. இந்தியாவுக்குத் தேவையான மருத்துவ ஆலோசனைகளை சீனா வழங்கும். இது தொடர்பாக இரு நாட்டுத் தலைவர்களும் தொடர்பில் உள்ளனர்" என்றார்.

## ரஷ்யாவில் கொரோனா வைரஸின் தாக்கம் குறைவாக இருப்பது ஏன்?

உலக நாடுகள் பலவற்றில் கரோனா வைரஸின் தாக்கம் அதிகமாகி வரும் நிலையில் ரஷ்யாவில் மட்டும் கரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் குறைவாக இருப்பது பலருக்கும் ஆச்சர்யத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யாவின் மக்கள்தொகை 14.6 கோடியாக உள்ளது. மேலும் சீனாவுடன், சுமார் 4,200 கிலோ மீட்டர் தூரத்துக்கு நீண்ட எல்லைப் பரப்பைக் கொண்டுள்ளது. ஆனாலும் கூட, ரஷ்யாவில் கொரோனா வைரஸ் பாதிப்பு மிக குறைவாக உள்ளது. ரஷ்யாவில், இதுவரை 306 பேருக்கு கரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.

உலகிலேயே, கரோனா வைரஸ் குறைவாக பதிவாகியுள்ள இரண்டாவது நாடு ரஷ்யா ஆகும். முதலாவது நாடாக ஐக்கிய அரபு அமீரகம் உள்ளது. அங்கு 0.11% என்ற அளவில் பாதிப்பு இருந்தது.

இதுவரை ரஷ்யாவில் 133,101 பேருக்கு கரோனா வைரஸ் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

சீனாவில் கரோனா வைரஸ் பரவத் தொடங்கியதுமே ரஷ்ய அரசு மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளால் அங்கு நோய் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டது.

ஜனவரி 30ம் தேதிக்கு முன்னதாக சீனாவுடனான அதன் 4,200 கிலோமீட்டர் தூர எல்லையை ரஷ்யா மூடிவிட்டது. மேலும் தனிமைப்படுத்தப்பட்ட மண்டலங்களையும் அமைத்தது.

புள்ளிவிவரங்களின்படி, அமெரிக்கா மார்ச் மாத தொடக்கத்தில் மட்டுமே கரோனா வைரஸ் சோதனையின் வேகத்தை அதிகரித்தது. அதே நேரத்தில் பிப்ரவரி தொடக்கத்தில் இருந்து விமான நிலையங்கள் உட்பட்ட பகுதிகளில், ஈரான், சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளின் பயணிகளை இலக்கு வைத்து, அவர்களிடத்தில் சோதனை நடத்தப்பட்டது. இதுபோன்ற காரணங்களால் அந்த நாட்டில் கொரோனா வைரஸ் பாதிப்பு குறைந்தது என்று அந்நாட்டு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து ரஷ்யாவில் உள்ள உலக சுகாதார அமைப்பின் (டபிள்யூஎச்ஓ) பிரதிநிதி டாக்டர் மெலிடா உஜ்னோவிக் கூறியதாவது:

"ரஷ்யா உண்மையில் ஜனவரி மாத இறுதியிலேயே தனது கெடுபிடிகளை தொடங்கிவிட்டது என்றே சொல்லலாம். சோதனையை தாண்டி ரஷ்யா பரந்த அளவிலான நடவடிக்கைகளை எடுத்துள்ளது பாராட்டத்தக்கது. இதனால் இந்த கொடிய வைரஸ் பரவுவது கட்டுப்படுத்தப்பட்டது. பரிசோதித்தல் மற்றும் அடையாளம் காணுதல், தொடர்புகளைக் கண்டறிதல், தனிமைப்படுத்துதல், இவை அனைத்தும் டபிள்யூஎச்ஏ தெரிவித்த விதிமுறைகளின்படி ரஷ்யாவில் நடந்தது." இவ்வாறு உஜ்னோவிக் கூறினார்.

இந்நிலையில் வரும் மே 1ம் தேதி வரை அனைத்து வெளிநாட்டினருக்கும் அனுமதியை ரஷ்ய அரசு மறுத்துள்ளது. மாஸ்கோவில், பள்ளிகள் மூடப்பட்டுள்ளன, மேலும் நகரத்தை முடக்குவது குறித்தும் அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர்.



சென்னையில் வாகன போக்குவரத்து குறைந்து காணப்பட்டது. வழக்கமாக போக்குவரத்து நெரிசலுடன் காணப்படும் பூந்தமல்லி நெடுஞ்சாலை வெறிச்சோடி கிடக்கும் காட்சி.



வருகிற 31ஆம் தேதி வரை ரயில் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டுள்ளதால் பணிமனையில் ரயில்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள காட்சி.



சென்னை கோயம்பேடு பஸ் நிலையத்தில் கொரோனா தொற்றை தடுக்கும் வகையில் செய்முறை விளக்கப்படத்துடன் வைக்கப்பட்டுள்ள தற்காலிக கை கழுவும் இடம்.

### மக்களிடம் நம்பிக்கையை உருவாக்கும் வகையில்

## ஜம்மு-கஷ்மீர் மாநிலத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்களை விடுதலை செய்ய வேண்டும்

### மக்களவையில் ஆ.ராசா வலியுறுத்தல்



புதுடெல்லி,மார்ச்.24-

மக்களிடம் நம்பிக்கையை உருவாக்கும் வகையில் ஜம்மு-கஷ்மீர் மாநிலத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள் விடுதலை செய்ய வேண்டும் என்று கழகக் கொறடாவும், மத்திய முன்னாள் அமைச்சருமான ஆ.இராசா மக்களவையில் வலியுறுத்தினார்.

இது குறித்து 18.3.2020 அன்று கழகக் கொறடாவும்,மத்திய முன்னாள் அமைச்சருமான ஆ.இராசா ஆற்றிய உரை வருமாறு:-

370வது அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு ரத்து செய்யப்பட்டது பற்றியும் அரசியலமைப்புச் சட்டத்தில் 35 ஏ பிரிவு நீக்கப்பட்டது பற்றியும் நிறைய பேசப்பட்டது இதுவெறும் ஒரு மறுபடியும் சொல்வதுதான். திருத்தங்கள் கொண்டு வந்து சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டு பிறகு அதை 7 மாதங்களில் என்ன செய்யப்பட்டுள்ளது? அதுதான் மிக முக்கியமானது.

சரித்திரத்தை மீண்டும் மீண்டும் திருத்தி, ஜவஹர்லால் நேரு மீதும் காந்தியடிகள் மீதும் 370வது பிரிவைக் கொண்டு வந்ததற்காகக் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதில் எந்தப் பயனும் இல்லை. அந்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டு 7 மாதங்கள் ஆகிவிட்டன. அதன் விளைவுகளை, அது செய்தது சரிதானா என்பதைத் தெரிவிக்க வேண்டும். அவர்களுடைய உறுதி மொழிகள் நடவடிக்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளனவா? அது அரசாங்கத்தின் பேச்சு இல்லை. உண்மையில் அரசு நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடுகளைப் பற்றி தெரிவித்துள்ளது. ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் நிதிநிலை அறிக்கையில் இந்த அவையில் சாதாரணமான சூழ்நிலையில் விவாதிக்கப் படவில்லை .45 ஆயிரம் துருப்புகளை பள்ளத்தாக்கில் நிறுத்தியுள்ளது. முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு, கொடிய சட்டமான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை அரசியல் தலைவர்களுக்கு எதிராகப் பிறப்பித்து விட்டு இந்தநிதிநிலை அறிக்கைகளை விவாதித்துக் கொண்டிருக்கிறோம். இதுவே ஜம்மு-காஷ்மீர் மற்றும் லடாக் பகுதிகளில் சுமூகநிலை இல்லை என்பதைச் காட்டுகிறது. 7 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் ஒருமுறை ஜம்மு-காஷ்மீர் லடாக் பகுதிகள் பற்றி பேசவாய்ப்பு கிடைத்துள்ளது. ஆனால் மாநில சட்டப் பேரவைக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதை நாம் எல்லோரும் அறிந்திருக்கிறோம்.

மறைமுகமான வழியில் அதை நாடாளுமன்றம் செய்து கொண்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கை விபரம் முற்றிலும் சம்பிரதாயமானது .இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்த போது, ஜம்மு - காஷ்மீரின் தற்போதைய பொருளாதார அரசியல் சூழ்நிலையில் நிதிநிலை அறிக்கை விபரங்களுக்குள் நான் சொல்ல விரும்ப வில்லை.

காஷ்மீரின் சுமூகநிலை, மாநிலத்தின் எல்லைக்குள் மனித நல்லிணக்கம் ஏற்படாத வரை மாநிலத்தில் செழிப்பும், சமாதானமும் ஏற்பட முடியாது. இந்த நிதிநிலை அறிக்கை ஒதுக்கீடுகளை ஆக்கப்பூர்வமான வகை யில் வகையில் பயன்படுத்து வதற்குஅதைப் பெற்றுக் கொள்வதில் நிலையில் காஷ்மீர் மக்கள் இருக்கிறார்களா? இல்லை என்றே நான் நினைக்கிறேன்.

உள்துறை அமைச்சரால் வழங்கப்பட்ட உறுதிமொழி என்ன? அவருடைய சொற்களிலேயே சொல்வதனால், "அரசியலமைப்புச் சட்ட மாற்றத்தை அமலாக்குதல்" அதாவது, 370 மற்றும் 35ஏ பிரிவுகளை நீக்குதல் இந்த வகையில் நடப்பது சிறந்த நிர்வாகம். நல்லாட்சி மற்றும் பொருளாதார மேம்பாட்டை காஷ்மீரில் ஏற்படுத்துவதற்காகத்தான். மேலும் அவர் சொன்னார்: "370-ஆவது பிரிவுதான் ஊழல் மற்றும் பயங்கரவாதத்திற்குக் காரணம் என்று உள்துறை அமைச்சரால் வழங்கப் பட்ட உறுதிமொழி நிறை வேற்றப்பட்டுள்ளதா? என்பதை நாம் சரிபார்க்க வேண்டும். அவர் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளட்டும். அதற்கான உண்மையான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

ஏற்கனவே அந்த மாநிலம் நாட்டின் பிற பகுதிகளைவிட சிறப்பான நிலையில் இருந்தது. மகப்பேறு உயிர் பிழைப்பு, குழந்தை உயிர் பிழைப்பு, திருமண வயது, பாலின விகிதம், பெண்கள் எழுத்தறிவு போன்றவற்றில் இந்தியாவின் சராசரியைவிட சிறப்பாக இருந்தது. பீகார் மாநிலங்களை விட அது சிறப்பாக இருந்தது. அதன்பிறகு, எந்த வகையான மாற்றத்தை அரசு செய்துள்ளது, 370-வது பிரிவால் அந்த மாநிலம் இளைத்துப் போயிருந்தது. அவர்கள் அங்கு பெரிய புரட்சியை ஏற்படுத்தப் போகிறார்கள் என்று கூறி வந்தது ஆனால், கிடைக்கும் புள்ளி விபரங்கள் அதற்கு எதிராக உள்ளன.

இப்போது நிதிநிலை அறிக்கையை எடுத்துக் கொள்வோம். முதலீட்டுச் செலவில் கடன் வாங்குதல்- குறைக்கப் பட்டிருப்பதாகக் காட்டுவதற்கு அவர்கள் கடுமையாக முயற்சித் திருக்கிறார்கள். அந்தச் செலவு குறைக்கப்பட்டுள்ளது. கூடுதல் வருவாய் அதிகரித்துள்ளது . நிர்வாகத்துறைக்கு மொத்த முதலீட்டு நிதிநிலை அறிக்கை ரூ2074 கோடி. இதில் உள்துறைக்கு எவ்வளவு 5357 சதவிகிதம் நிர்வாகத்திற்கான செலவில் பெரும்பகுதி உள்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. எதற்காக? மாநில காவல் துறை, பாதுகாப்புப்படை ஆகியவற்றைப் பராமரிக்க இதன் பொருள் என்ன? ஜம்மு-காஷ்மீர், லடாக் பாதுகாப்பற்ற ஆபத்தான மண்டலத்தில் உள்ளனவா? இது பிரச்சினை அல்ல.

சமூகத்துறைக்கு ஒதுக்கீடு 4,969 கோடி சுகாதார நிதிநிலை 2552 சதவிகிதம் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு 20 சதவிகிதம் பழங்குடியினர் நல நிலை எவ்வளவு பெறும் 59 சதவிகிதம் இது மிகக் குறைவான சதவிகிதமாகும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியான (ஜிடிபி) யின் செயல்பாட்டுக்கு வருகிறேன். ஜிடிபிக்கு பிரிவு வாரி முதலீடு எவ்வளவு 12 சதவிகிதம். பொருளாதாரப் பிரிவுக்கு 29 சதவிகிதப் நிர்வாகப் பிரிவுக்கு 53 சதவிகிதம் உள் கட்டமைப்பு பிரிவிக்கு 52 சதவிகிதம் அரசு கூறியது 370 ஐ ரத்து செய்தவுடன் உள்நாட்டு முதலீட்டாளர்கள் வருவார்கள் அவர்கள் பெருமளவில் முதலீடு செய்வார்கள் என்று சொன்னாலும் எந்த முயற்சியும் மேற்கொள்ள ப்படவில்லை. அதற்கு ஒரு ஆதாரம் கூட இல்லை.

பேரிடர் நிர்வாகத்திற்கு பெரிய தொகை ஒதுக்கப் பட்டுள்ளது.இதன் பொருள் மறுவாழ்வு அளிப்பதற்கு என்பதாகும். பேரிடம் நிர்வாகமும் மறுவாழ்வும் எப்போது வந்தது? அங்கே இயற்கைப் பேரிடம் எதுவும் இல்லை எந்த பேரிடர் அசாம்பாவிதமும் ஏற்படவில்லை என்றும் ஏன் அவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது? ஏனெனில் அரசாங்கத்திற்கு நிறைய வேண்டும் ஊரெடங்கும் உத்தரமே, தடைகளும் விதிக்கப்பட்டு வருவதால் அரசுக்கு பணம் தேவைப்படுகிறது.7,8 மாதங்களில் ஐம்மு காஷ்மீரில் எல்லா தரப்பிலும் நிலைமை மோசமாகியுள்ளது இன்று அங்கு என்ன நடைபெற்று வருகிறது? முக்கிய பொருளாதாரங்கள் கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது.

370 வது பிரிவு ரத்து செய்யப்பட்ட பிறகு ஐம்மு-காஷ்மீர் பொருளாதாரம் 178 பில்லியன்(கோடி) இழந்துள்ளது. கைத்தறி, சுற்றுலா, தகவல் தொழில்நுட்புத் துறைகளில் 90,000 க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகள் இழக்கப்பட்டுள்ளன. 70 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஒரு பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக ஆப்பிள் தொழில் ஜிடிபிக்கு 8 சதவிகிதம் வழங்கி வந்தது. அதில் 80 மில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதற்கு யார் பொறுப்பு? 370 போய் விட்டால் எல்லாம் சுமுகமாகிவிடும் என்று சொன்னது நிரூபிக்கப்பட்டுவிட்டதா? இல்லவே இல்லை.

தீவிரவாதிகளின் தாக்குதல் அரசாங்கத்தில் கடுமையான முடக்கங்கள் சேர்ந்து விவசாய மற்றும் தோட்டக்களை அறுவடையை தாமதப்படுத்தியது மட்டுமின்றி காஷ்மீரில் மக்கள் வாழ்க்கையும் கடுமையாக பாதித்துள்ளது. இங்கே வெளியுறவுத்துறை அமைச்சர் இருக்கிறார். சர்வதேச அளவில் காஷ்மீர் பிரச்சினை எப்படி உள்ளது? அரசின் நடவடிக்கை சர்வதேச சமுதாயத்தால் ஏற்றுக் கொள் ளப்பட்டுள்ளதா?

அக்டோபர் 29 தேதி ஐரோப்பிய ஒன்றியத்தைச் சேர்ந்த 27 உறுப்பினர் பிரதிநிதிகள் குழுவை அரசு அனுமதித்தது தனியார் அரசுசாரா அமைப்பின் மூலம் அன்பு அழைப்பு விடப்பட்டது 27 உறுப்பினர்களை 22 பேர் வலது சாரி இஸ்லாமிய எதிர்ப்பு நாடுகளைச் சேர்ந்தவர்கள் அந்த பக்கம் ஸ்ரீநகரில் உள்ள ஒரு 5 நட்சத்திர ஓட்டலுக்கு அழைத்துச் சென்றது. இங்கிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர் கிருத்துதாஸ், தான் மக்களிடம் உரையாடவேண்டும் என்று கோரியதாகவும் தமக்கு அழைப்புரத்து செய்யப்பட்டதாகும் கூறியுள்ளார் இது நமக்கு அவமானம் இல்லையா? இதின் பொருள் என்ன இது எந்த வகையிலான ஜனநாயகம்?

அக்டோபர் 22ஆம் தேதி அமெரிக்க நாடாளுமன்ற ஆய்வுக்குழு, அப்பகுதி முழுவதும் மூடப்பட்டு மனித நேயப் பிரச்சினை எழுந்துள்ளது என்று கூறியது. அமெரிக்காவில் உள்ள இந்திய தூதர் அக்ஷவர்தன திங் தாவுக் அவர்கள் கடிதம் எழுதி யுள்ளார்கள். வெளியுறவுத் துறை அமைச்சர் இங்கே உள்ளார் இந்தியாவின் தூதருக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது அதை நான் குறிப்பிடுகிறேன்

உண்மையாக வெளிநாட்டு தலைமை பத்திரிக்கையாளர் களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், காஷ்மீர் பகுதிக்குள் அனுமதிக்கப்பட்டால் மட்டுமேஎட்ட முடியும், ஐம்முகாஷ்மீரில் உள் நாட்டுமற்றும் வெளி நாட்டு பத்திரிகையாள ருக்கும் திறந்து விட இந்தியாவை ஊக்குவிக்கிறோம். வெளிபடையான ஊடக மற்றும் அதிகரித்த தகவல் தொடர்புகளில் ஆர்வம் கொண்ட சர்வதேச பார்வையாளர்கள் அனுமதிக்கப்படவில்லை என்று அந்தக் குழு எழுதியுள்ளது ஆனால் அது நடைபெறவில்லைநமக்கு இப்போ தேவைப்படுவது நிதி ஒதுக்கீடு அல்ல அதாவது பணம்அ ல்ல அந்த மாநிலத்திற்கு தேவையானது நம்பிக்கை தய்வுசெய்து ஐம்மு காஷ்மீர் மாநில மக்களிடையே உறுதியான நம்பிக்கையை மீண்டும் தட்டி எழுப்புங்கள் தய்வுசெய்து இராணுவ பாதுகாப்பு சட்டத்தை ரத்து செய்யுங்கள்.

கடத்தப்பட்ட அரசியல் நடைமுறைகளையும் அகற்றுங்கள் கைது செய்யப்பட்ட அரசியல் தலைவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்,இந்த நடவடிக்கைகள் இல்லாமல் நிதி நிலை ஒதுக்கீடுகள் என்றைக்கும் பயன் படாது.

இவ்வாறு கழகக்கொறடா மத்திய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா பேசினார்.

## அமைப்புசாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் ஒரு மாத வாழ்வாதாரத்திற்கு தேவையான நிதி உதவி அளிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

### தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்



சென்னை,மார்ச்.24-

அமைப்புசாரா தொழிலாளர் அனைவருக்கும் ஒரு மாத வாழ்வாதாரத்திற்கு தேவையான நிதியுதவி, ஏழை, எளிய மக்களுக்கு ரேஷன் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வது ஆகியவற்றை தமிழக அரசு உடனடியாக அறிவிக்கவேண்டும் என்று தமிழக அரசுக்கு முகஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

திமுக. தலைவர் முகஸ்டாலின் வெளியிட் டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது:-

கொரோனா வைரஸ் காரணமாக இந்திய அளவில் உள்ள 75 மாவட்டங்களில் தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னை உள்ளிட்ட 3 மாவட்டங்களிலும் அத்தியாவசியத் தேவைகள் மட்டும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. இந்த நேரத்தில் அரசு முழு வீச்சில் களமிறங்கி மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கொரோனா நோய் விவகாரத்தில் தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந் தாலும், முதல் கேஸ் ரிப்போர்ட் ஆனதிலிருந்து இன்றுவரை பாதிக்கப் பட்டுள்ள நகரங் களை, மாநகரங்களைத் தனிமைப் படுத்துவதில் தமிழக அரசு இன்னும் வேகமாகச் செயல்படாதது கவலையளிக்கிறது.

'சட்ட மன்றத்தை நடத்துவேன்' என்று பிடிவாதம் பிடித்ததும், பள்ளித் தேர்வுகளை தொடர்ந்து நடத்துவதும் ஒரு பொறுப்பான அரசுக்கு அழகல்ல. கல்வி நிலையங் களை 31-ந் தேதிவரை மூடினா லும் தேர்வுகள் வைத்து மாணவர்களையும், ஆசிரியர் களையும் பணிக்கு அழைத்தது தவறான அணுகுமுறை. இவையெல்லாம் அரசின் அலட்சியத்திற்கு ஓர் அடையாளம்.

இவற்றையெல்லாம் சரி செய்து கொண்டு தமிழக அரசு தீவிர நோய்த்தடுப்பு நடவ டிக்கைகளில் ஈடுபடும் என இன்னமும்கூட நம்புகிறேன். கொரோனா நோய் பரிசோதனை கட்டணமாக ரூ.4500 நிர்ணயிக்கப் பட்டிருப்பது அதிகமாக இருப்பதால், அந்தக் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொள்ள முன்வர வேண்டும்.

தற்போது முதல்-அமைச்சர் அறிவித்துள்ள ரூ500 கோடி நிதியுதவி போதாது. அமைப்புசாரா தொழிலாளர் களுக்கு எவ்வித நிதியுதவியும் அளிக்கப்படாதது மிகுந்த வேதனையளிக்கிறது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், தனியார் நிறுவன ஊழியர் கள் அனைவரும் பாதிக்கப் படாத வகையில் அவர்களுக்கு மாத சம்பளத்தை வழங்கு வதை உறுதி செய்து அமைப்புசாரா தொழி லாளர்கள் அனைவருக்கும் ஒரு மாத வாழ்வாதாரத்திற்குத் தேவையான நிதியுதவி, ஏழை எளிய மக்களுக்கு ரேஷன் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்வது ஆகியவற்றைத் தமிழக அரசு உடனடியாக அறிவிக்க வேண்டும். அதுதான் 'தனிமைப் படுத்துதல்' முயற்சிக்கு வலுசேர்க்கும்.

இதை மனதில் வைத்துத்தான் தி.மு.க. சார்பில் எம்பிக்களும், எம்எல்ஏக்களும் தங்களது ஒரு மாத சம்பளத்தை முதல்-அமைச்சர் பொது நிவாரண நிதிக்கு வழங்கிட அறிவுறுத்தியிருக்கிறேன். இவையெல்லாம் ஒருபுறமிருக்க, பிரதமர் நரேந்திர மோடி கூறியிருப்பது போல் தனிமைப்படுத்துதலை பொதுமக்கள் கவனத்துடனும் அக்கறையுடனும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொருவரும் தனிமைப் படுத்திக் கொள்வதால் இன்னொருவரைக் காப்பாற்ற முடியும். அதன்மூலம் நம் குடியிருப்பில், ஊரில், நகரில், மாநகரில் உள்ளோரைக் காப்பாற்ற முடியும். ஒட்டு மொத்தமாகத் தமிழ் நாட்டையும், இந்தியாவை யும் கொரோனா நோய்ப் பாதிப் பிலிருந்து வெற்றிகரமாக காப்பாற்றி விட முடியும் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து, அதற்கேற்ப செயல்பட்டிட வேண்டும் என்று தமிழக மக்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

சுய ஒழுக்கத்திலும், சுய கட்டுப்பாட்டிலும் இந்தியாவிற்கே வழி காட்டியாக விளங்கிடும் தமிழக மக்கள் இதில் மிகுந்த எச்சரிக்கையுணர்வுடன் செயல்பட்டு வீட்டை விட்டு வெளியில் செல்வதைத் தவிர்த்து ஆங்காங்கே கூட்டம் கூடுவதை அறவே தவிர்த்திட வேண்டும் என்று ஒவ்வொருவரையும் இருகரம் கூப்பி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### கொரோனா வைரஸ் தாக்குதலால் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 5.2 சதவீதமாக குறையும்

#### தர குறியீட்டு நிர்ணயம் மதிப்பீடு

புதுடெல்லி,மார்ச்.24-

வைரஸ் தாக்குதலால் வரும் 2020-21-ம் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர் ச்சி 52 சதவீதமாக இருக்கும் என சர் வதேச தரக்குறியீட்டு நிறுவனமான எஸ்'பி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் மேலும் தெரிவித் துள்ளதாவது:

வரும் 2020-21-ஆம் நிதியாண்டில் இந்தியாவின் பொரு ளாதார வளர் ச்சி 65 சதவீதமாக இருக்கும் என முன்பு மதிப்பிடப் பட்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில், கரோனா வைரஸ் உலக பொருளா தாரத்தில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தி யுள்ளது. அதன விளைவாக, வரும் நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர் ச்சி 52 சதவீதமாக குறையும் என தற்போதை மதிப்பீட்டின் மூலமாக தெரியவந்துள்ளது.

இதைத் தொடர் ந்து வரும் 2021-22 ஆம் நிதியாண்டிலும் பொருளாதார வளர் ச்சி மதிப்பீடு 7 சதவீதத்திலிருந்து 69 சதவீதமாக குறைக்கப் பட்டுள்ளது.

அதேசமயம், மார் ச் 31-ஆம் தேதியுடன் முடிவடையவுள்ள 2019-20-ஆம் நிதியாண்டில் பொருளாதார வளர் ச்சி 5 சதவீத அளவுக்கே இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

பணவீக்கத்தைப் பொருத்த வரையில் தற்போதைய 47 சதவீதத்திலிருந்து அடுத்த நிதியாண்டில் 4.4 சதவீத மாக குறையும் என எதிர் பார் க்கப்படுகிறது. இது, 2021-22 நிதியாண்டில் 42 சதவீதமாக குறையும் எனவும், 2021-22 நிதியாண்டில் 4.4 சதவீத மாகவும், 2022-23 நிதியாண்டில் 45 சதவீத மாகவும் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் கரோனா வைரஸ் பாதிப்பால் ஏறக்குறைய ரூ.46 லட்சம் கோடி அளவுக்கு (62,000 கோடி டாலர் ) நிரந்தர வருவாய் இழப்பு ஏற்படும் என எஸ்'பி தெரிவித்துள்ளது.

### கொரோனா வைரஸை தடுக்கும் வகையில்

## புதுவை முதல்வர் எடுத்த நடவடிக்கைகளுக்கு அனைத்து மக்களும் முழு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்

#### புதுவை மாநில இ.யூ. முஸ்லிம் லீக் பொதுச்செயலாளர் ஏ. முஹம்மது அலி அறிக்கை



புதுச்சேரி,மார்ச்.24-

கோவிட் - 19 கொரோனா புதுச்சேரி மாநிலத்திற்கு மார்ச் 31 வரை 144 தடை உத்தரவு புதுவை முதல்வர் வி. நாராயணசாமி அவர்கள் கொரோனா வைரஸ்பரவாமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்துள்ளார்.

இந்த நடவடிக்கைக்கு புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களும் முழு ஒத்துழைப்பு தருமாறு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அன்போடு கேட்டுக் கொள் கிறது.

புதுச்சேரி அரசு எடுத் துள்ள இந்த நடவடிக்கையால் தினமும் உழைத்து உண் ணக்கூடிய தினக்கூலி ஊழியர்களும், தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் பணியாளர்களும் வெகுவாக பாதிப்புக்குள்ளாவார்கள்.

எனவே புதுச்சேரி மாநில அரசு ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 10,000/- ரூபாயும், வீடு தேடி அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை நிவாரணமாக வழங்க வேண்டும் என்றும், அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் தரமான மருத்துவ வசதிகள் செய்து தரவேண்டும் என புதுவை அரசை கேட்டுக்கொள்கிறோம்.

### கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக

## மக்கள் தொகை கணக்கெடுப்பு முதல்கட்ட பணிகளை ஒத்திவைக்க மத்திய அரசு பரிசீலனை

புதுடெல்லி,மார்ச்.24-

கரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக தேசிய மக்கள்தொகை பதிவேடு (என்பிஆர் ), மக்கள் தொகை கணக் கெடுப்புக்கான முதல் கட்ட பணிகளை ஒத்திவைக்க மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

இதுகுறித்து டெல்லியில் செய்தியாளர் களிடம் மத்திய உள்துறை அமைச்சக அதிகாரிகள் ஞாயிற்றுக் கிழமை கூறுகையில், 'கரோனா வைரஸ் பிரச்னை தீரும் வரை என்பிஆர் , மக்கள்தொகை கணக்கெடுப்பு ஆகிய பணிகளை ஒத்திவைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இதுதொடர் பாக அதிகாரப்பூர் வ அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்' என்று தெரிவித்தனர் .

ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் செப்டம்பர் 30-ஆம் தேதி வரை என்பிஆர் , மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகள் நடைபெறும் என்று மத்திய உள்துறை அமைச்சகம் கடந்த வாரம் தெரிவித்திருந்தது.

என்பிஆர் பணிகளை முன்னெடுக்க கேரளம், மேற்கு வங்கம், பஞ்சாப், ராஜஸ்தான், சத்தீஸ்கர் , பிகார் ஆகிய மாநிலங்கள் எதிர் ப்பு தெரிவித்து வருகின்றன.

அதேநேரம், வீடுதோறும் மக்கள்தொகை கணக் கெடுப்புப் பணியை நடத்து வதற்கு ஒத்துழைப்பை அளிப் பதாக அந்த மாநில அரசுகள் அறிவித்துள்ளன.

தேசிய அளவிலும், மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்களில் என்பிஆர் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கு முன்பு 2010-ஆம் ஆண்டு என்பிஆர் பணிகளும், 2011-இல் மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகளும் நடத்தப்பட்டன.

என்பிஆரை 2015-ஆம் ஆண்டு மேம்படுத்தியபோது ஆதார், செல்லிடப்பேசி எண் ஆகிய விவரங்கள் சேர் க்கப்பட்டன. இந்த முறை, ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, நிரந்தர கணக்கு எண் ஆகியவை சேகரிக்க ப்படவுள்ளன. என்பிஆர் பணிகளுக்காக ரூ.3,941.35 கோடியை ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.

MANICHUDAR TAMIL DAILY Printed and Published by K.A.M. MUHAMMED ABUBACKER on behalf of Madras Media Private Limited from No. 36, Maraikayar Lebbai Street, Mannady, Chennai - 600 001 and printed at J.M. Process, No. 29, V.N. Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600 002. E-mail : manichudardaily@gmail.com | Ph : 044 - 2521 7890 / 2521 7786 Editor : Prof. K.M. KADER MOHIDEEN, Ex. M.P.